S. Ratnasabap...
Punguduti...

ௐ

# சோதிட பரிபாலினி

## THE SOTHIDAPARIPALINI

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

மலர் 3 | ரௌத்திரி ஹூ ஆனி மீ 1உ | இதழ் 3

விஷய அட்டவணை


1. சந்திரபலனச் சக்கரம்
2. ரௌத்திரிவருஷ ஆனிமாதக் கிரகநிலை
3. ரௌத்திரிவருஷ ஆனிமாத விசேடதினங்கள்
4. ரௌத்திரிவருஷ ஆனி மாதச் சுபமுகூர்த்தங்கள்
5. திருத்திய கணிதஜோதிட நாசகாரிகள்
6. 13-3-80வ் சோதிடமலரில் வெளியான செய்திக்கு விளக்கம்
7. அழுவதா? சிரிப்பதா?
8. சிம்மலக்கினத்தில் பிறந்வர்களினது பலன்கள்
9. ஆனி மாதத்தாராபலமில்லாத தேதிகள்
10. எண்கள் புரியும் விந்தைகள் பாரீர்...!
11. எம். ஜீ. ஆர். வெற்றி
12. இலங்கைக்குப் பலன்
13. பன்னிரு இராசிகளும் அவற்றின் பலன்களும்
14. நிலவும் நீறும்
15. தில்லையும் திருமஞ்சனமும்
16. ரௌத்திரிவருஷ ஆனிமாத மகாதெசைப்பலன்கள்


ஆசிரியர் :
இ. சி. இ. வெங்கடேச ஐயர்

சோதிடபரிபாலன மடம்,
கொக்குவில்.

# சந்திர பலனச் சக்கரம்

| ரௌத்திரி ஞூ ஆனி மீ முதல் தேதி | ம. மி | வரை தேதி | ம. மி | சந்திரராசி | மேட | இடப | மிது | கர்க்க | சிங்க | கன் | துலா | விருச் | தனு | மகர | கும்ப | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | 5-54 | 1 நப | 12-09 | மிதுனம் | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 1 நண் | 12-09 | 3 முஇ | 8-45 | கடகம் | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 3 முஇ | 8-45 | 5 முப | 7-36 | சிங்கம் | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 |
| 6 பிப | 4-21 | 8 முஇ | 7-36 | கன்னி | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 |
| 8 நஇ | 7-36 | 11காலே | 6-17 | துலாம் | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 |
| 11 காலே | 6-17 | 13 பிப | 3-12 | விருச்சிகம் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 |
| 13 நண் | 3-12 | 15 முஇ | 9-39 | தனு | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 |
| 15 முஇ | 9-39 | 17 பிப | 1-58 | மகரம் | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 |
| 17 பிஇ | 1-58 | 19 பிப | 4-55 | கும்பம் | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 12 |
| 19 பிஇ | 4-55 | 22 காலே | 7-17 | மீனம் | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 22 காலே | 7-17 | 24 முப | 1054 | மேடம் | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| 24 முப | 10-54 | 26 பிப | 2-00 | இடபம் | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 |
| 26 பிப | 2-00 | 28 முஇ | 7-57 | மிதுனம் | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 28 முஇ | 7 57 | 30 பிஇ | 4-19 | கடகம் | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 |
| 30 பிஇ | 4-19 | 31 காலே | 6-00 | சிங்கம் | 5 | 4 | 3 | 2 | 1 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 |

(ஜன்ம நக்ஷத்திர இராசிக்காரர்களுக்குச் சந்திரன் நிற்கும் ஸ்தானங்கள்)

**சந்திரன், ஜன்மநக்ஷத்திரராசி முதலாக ஒவ்வொரு இராசிகளிலும் இருக்கும் பலன்.**

1-ல் போசனசயனசுகம், வஸ்திராபரணுதி, அலங்காரம், களத்திரமித்திரமகிழ்ச்சி, விஷயபோகம்.
2-ல் அதிகசெலவு, அவமானம், காரியவிக்கினம், ஆயாசம், வாக்குகலகம்.
3-ல் தனலாபம் வஸ்திரலாபம், போசனசுகம், களத்திரமித்திரசுகம், நற்கீர்த்தி, ஜயம்.
4-ல் யாரிடத்திலும் நம்பிக்கைக்குறைவு, யோசனை, பந்துபீடை, தனநாசம்.
5-ல் தாழ்ந்தநிலே, மனக்குழப்பம், பிரயாணத்தடை, பணக்குறைவு. அசீரணரோகம், நடைக்கஷ்டம்.
6-ல் தனலாபதேகசௌக்கியம் சத்துருஜயம் விரும்பிய பொருட்பேறு, மனமகிழ்ச்சி. [களத்திரசுகம்.
7-ல் போசனசுகம், பொருட்பேறு, வாகனசௌக்கியம், மரியாதை, பந்துக்களுறவு. வஸ்திரலாபம்.
8-ல் மனப்பயம், வியாதி, எதிர்பாராத ஆபத்து, கலகம், பொருட்சேதம், தேகமெலிவு, மிருத்துபயம்.
9-ல் கட்டுப்படுதல், மனக்கவலே, பிரயாசமிகுதி, வயிற்றில்ரோகம், பொருட்சேதம், சத்துருபீடை, மானக் [குறைவு.
10-ல் அதிகாரம் காரியனுகூலம், பெரியோர்சன்மானம், சந்தோஷம், நற்கீர்த்தி.
11-ல் தனவிருத்தி, சினேகிதர்கொண்டாட்டம், சயனபோசனசுகம், களத்திரமகிழ்ச்சி, சுபசோபனம்.
12-ல் தனச்செலவு, தனது செய்கையினுற்கேடு, பிறர்க்குக்கீழ்ப்படுதல், சோம்பல், பொருமை, குறைவு.

**கவனிப்பு:** விவாகாதி சகல சுபகருமங்களுக்கும், புதியகாரியந் தொடங்குதல், வியாச்சியந்தொடுத்தல், புதிய பொருள் கொள்ளல் விற்றல், பிரயாணம் முதலிய பல செய்கைகளுக்கும் சந்திரபலம் சுபமாயிருத்தல் அவசியமாகும். இதனைக்கவனித்து நடப்போர் பலனுறுதல் திண்ணம்.

உ
சிவமயம்



"ஓதி டத்திட முள்ளவ ருய்யுமா
ருதி வேதத்தி னங்கமொ ராறனுட்
சோதி டப்பரி பாலினி சொல்லுவான்
மாதிடத்தன் மலரடி போற்றுவாம்."

## ரௌத்திரிவருஷ ஆனிமாதக் கிரகசாரம்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரிய புத சுக்கிர |
| | 1-ம் திகதி முதல் 31-ம் திகதி வரை | | ராகு |
| கேது | | | செவ், குரு, சனி |
| | | | |

சந்திரன்: இம்மாதம் முழுவதும் மிதுனம் முதல் சிங்கம் வரை சஞ்சரிப்பார்.

1-ம் திகதி நாடி 38·00 விநாடி 00 (மு. இ. மணி 9 நிமி 06)-ல் புதன் வக்கிராரம்பம்

2-ந் திகதி நாடி 5 விநாடி 00 (மு. ப. மணி 7 நி 54)-ல் சுக்கிரன் மேற்கே வக்கிர அஸ்தமனம்

8-ந் திகதி நாடி 38 விநாடி 00 (மு. இ. மணி 9 நி 07-ல் புதன் மேற்கே வக்கிர அஸ்தமனம்.

13-ம் திகதி நாடி 5 விநாடி 00 (மு ப. மணி 7 நி 55)-ல் சுக்கிரன் கிழக்கே வக். உதயம்

15-ம் திகதி நாடி 54 விநாடி 58 (பி இ. மணி 3 நி 55)-ல் கன்னி செவ்வாய்

18-ந் திகதி நாடி 40 விநாடி 22 (மு.இ.மணி 10 நி06)-ல் வக்கிர இடப சுக்கிரன்

21-ந் திகதி நாடி 38 விநாடி 00 (மு. இ. மணி 9 நி09)-ல் புதன் கிழக்கே வக். உதயம்

22-ந் திகதி நாடி 38 விநாடி 00 (மு. இ. மணி 9 நி 09)-ல் புதன் வக்கிரக நிவர்த்தி

28-ந் திகதி நாடி 5 விநாடி 00 (மு. ப. மணி 7 நி 59)-ல் சுக்கிரன் வக்கிர நிவர்த்தி

செவ்வாய்: கிழக்கே தோற்றிவருவார்.

புதன்: 7-ந் திகதிவவரையும் மாலை வெள்ளியாக மேற்கே தோற்றிவருவார்.

குரு: கிழக்கே தோற்றிவருவார்.

சுக்கிரன்: 1-ம் திகதிவரையும் மாலைவெள்ளியாக மேற்கே தோற்றிவருவார்.

சனி: கிழக்கே தோற்றிவருவார்,

புதன்: 22-ம் திகதியின்மேல் காலை வெள்ளியாகக் கிழக்கே தோற்றி வருவார்.

சுக்கிரன்: 14-ம் திகதியின்மேல் காலைவெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

"செய்துவிடமுடியும். இது அற்ப விஷயம்; சுலபமாக முடித்துவிடலாம். அதற்குக் கவனம் செலுத்தத் தேவையில்லை" இவ்விதம் சிலர் தங்கள் காரியங்களை நினைத்துவிடுகிறார்கள். ஆகவே கவனக்குறைவால் அவர்கள் வழுவிப் பரிதாபமான கஷ்டத்தையடைகிறார்கள். ஆபத்து ஏற்பட்டால் துக்கம் சுலபமாக வந்துவிடும்.

## ரௌத்திரிவருடம் ஆனிமாத விசேட தினங்கள்

2 திங்கள் சதுர்த்திவிரதம் — இது விநாயகருக்குரிய விரததினமாகும்.
4 புதன் ஷஷ்டி விரதம் — இது சுப்பிரமணியருக்குரிய விரததினமாகும்.
5 வியாழன் இரவு நடேசரபிஷேகம் — இது நடராசப்பெருமானுக்குரிய விசேட அபிஷேக தினமாகும்.
6 வெள்ளி உதயம் நடேசர் ஆனி உத்தர தரிசனம் — இது நடராசருக்குரிய விசேட தரிசன தினமாகும்.
8 ஞாயிறு பாபஹரதசமி.
10 செவ்வாய் ஏகாதசிவிரதம் — இது விஷ்ணுவுக்குரிய விரததினமாகும்.
11 புதன் பிரதோஷ விரதம் இது சிவனுக்குரிய விரததினமாகும்.
11 புதன் கூர்மஜயந்தி — இது விஷ்ணு ஆமை அவதாரம் எடுத்த தினமாகும்.
14 சனி பூரணைவிரதம் — இதில் பிதுர்தர்ப்பணம் செய்வது நல்லது.
14 சனி பௌச்சிய மன்னுவாதி.
17 செவ்வாய் அலப்பியம்
24 செவ்வாய் ஏகாதசி விரதம் — இது விஷ்ணுவுக்குரிய விரததினமாகும்.
24 செவ்வாய் கார்த்திகைவிரதம் — இது கந்தசுவாமியாருக்குரிய விரததினமாகும்.
25 புதன் பிரதோஷவிரதம் — இது சிவனுக்குரிய விரததினமாகும்.
27 வெள்ளி அமாவாசை விரதம் — இதில் பிதுர்தர்ப்பணம் செய்வது நல்லது.
31 செவ்வாய் தக்ஷிணாயன புண்ணியகாலம்.

நூறுபத்து யோசனை தூரத்தில் இறைச்சி இருந்தாலும் பறவை பார்த்து விடும். ஆனால் அதேபறவை காலம் வந்துவிட்டால் தனக்கு விரித்த வலையையும் பார்க்காது.

சந்திரசூரியர்களையும் கிரஹணம் பீடித்துவிடுகிறது. யானையும் பாம்பும் பிடிபட்டு விடுகின்றன. புத்திசாலிகள் வறுமையில் உழல்கிறார்கள். அவ்விதம் இருக்க விதிவலிது. எங்கிருந்தோ எவ்வகையிலோ, எப்பொழுதோ எப்படியோ, எதற்காகவோ, எந்த அளவுக்கோ ஒருவன் செய்யும் நன்மை தீமை அங்கிருந்து அவ்வகையில் அப்போது அப்படியே அதற்காக அந்த அளவுக்கு விதிவசத்தால் அவனிடமே திரும்ப வந்து அடையும்.

உயர ஆகாயத்தில் பறந்துசென்றாலும் பறவைகளுக்கு ஆபத்து நேரிடுகிறது. அகாதமான ஆழங்கொண்ட கடலிலிருக்கும் மீன்களையும் நிபுணர்கள் பிடித்துவிடுகிறார்கள். இவ்வுலகத்திலே நற்கருமங்களோ, கெட்ட நடத்தைகளோ என்ன பிரயோசனம்? நற்குணங்களையடைவதால்தான் என்ன பலன்? கஷ்டம் வந்தபோது எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் விதி பிடித்துத் தன்னிடம் இழுத்துக்கொண்டுவிடும்!

கூற்றுவன் பாசத்தால் கட்டுண்டும், விதிவசத்தால் மதியிழந்தும் இருந்தால், புத்திசாலிகளேயாயினும் அவர்கள் அறிவும் மழுங்கி வளைந்து போய்விடும்.

## ரௌத்திரிவருஷ ஆனிமாதச் சுபமுகூர்த்தங்கள்

### அன்னப்பிராசனம், புதிதுண்ணல்

ஆனி 11 புதன் முன்னிரவு மணி 9 நிமி 56 முதல் மணி 11 நிமி 29 வரை.
,, ,, ,, பின்னிரவு மணி 3 நிமி 13 முதல் மணி 5 நிமி 04 வரை.
,, 18 புதன் பின்னிரவு மணி 2 நிமி 46 முதல் மணி 4 நிமி 30 வரை
,, 25 புதன் பின்னிரவு மணி 2 நிமி 19 முதல் மணி 3 நிமி 29 வரை

### திருமங்கலியத்துக்குப் பொன்னுருக்கல் விவாகப்பதிவு செய்தல்

ஆனி 9 திங்கள் பகல் மணி 11 நிமி 54 முதல் மணி 1 நிமி 33 வரை.
,, ,, ,, பிற்பகல் மணி 1 நிமி 45 முதல் மணி 2 நிமி 34 வரை.
,, 11 புதன் பிற்பகல் மணி 1 நிமி 37 முதல் மணி 2 நிமி 29 வரை.
,, ,, ,, பின்னிரவு மணி 3 நிமி 13 முதல் மணி 5 நிமி 04 வரை.
,, 18 ,, பிற்பகல் மணி 1 நிமி 36 முதல் மணி 3 நிமி 02 வரை
,, 18 ,, முன்னிரவு மணி 11 நிமி 13 முதல் மணி 11 நிமி 49 வரை
,, ,, ,, பின்னிரவு மணி 2 46 நிமி முதல் மணி 4 நிமி 36 வரை.
,, 25 ,, பிர்பகல் மணி 1 நிமி 32 முதல் மணி 2 நிமி 34 வரை.

### விவாகம்

ஆனி 9 திங்கள் பகல் மணி 11 நிமி 54 முதல் மணி 1 33 வரை இலக்கினம் - கன்னி
,, ,, ,, பிற்பகல் மணி 1 நிமி 45 முதல் மணி 2 நிமி 34 வரை ,, - துலாம்
,, ,, ,, முன்னிரவு மணி 10 நிமி 04 முதல் மணி 11 நிமி 36 வரை ,, - கும்பம்
,, 11 புதன் பிற்பகல் மணி 1 நிமி 37 முதல் மணி 2 நிமி 29 வரை துலாம்
,, ,, ,, முன்னிரவு மணி 9 நிமி 56 முதல் மணி 11 நிமி 26 வரை ,, - கும்பம்
,, ,, பின்னிரவு மணி 3 நிமி 23 முதல் மணி 5 நிமி 04 வரை ,, - இடபம்
,, 13 வெள்ளி பின்னிரவு மணி 4 நிமி 39 முதல் மணி 4 நிமி 55 வரை ,, - இடபம்
, 14 சனி பகல் மணி 11 நிமி 27 முதல் மணி 1 நிமி 13 வரை ,, - கன்னி
,, ,, ,, பிற்பகல் மணி 1 நிமி 24 முதல் மணி 1 நிமி 57 வரை ,, - துலாம்
,, 15 ஞாயிறு முன்னிரவு மணி 9 நிமி 40 முதல் மணி 11 நிமி 13 வரை ,, - கும்பம்
,, ,, ,, பின்னிரவு மணி 3 நிமி 01 முதல் மணி 4 நிமி 22 வரை ,, - இடபம்
,, 25 புதன் பிற்பகல் மணி 1 நிமி 32 முதல் மணி 2 நிமி 34 வரை ,, - துலாம்
,, ,, ,, முன்னிரவு மணி 10 நிமி 43 முதல் மணி 11 நிமி 50 வரை ,, - கும்பம்
,, ,, ,, பின்னிரவு மணி 2 நிமி 19 முதல் மணி 3 நிமி 29 வரை ,, - இடபம்

### வீடுகட்டுதல், குடிபுகுதல்

ஆனி 11 புதன் மு. இ. 9 மணி 56 நி. முதல் 11 மணி 28 நி. வரை. இலக்கினம் கும்பம் திக்கு : வடதெற்கு விபரம் : குடிபுக.

ஆனி 11 புதன் பி. இ. 3 மணி 13 நி. முதல் 5 மணி 04 நி. வரை. இலக்கினம் : இடபம் திக்கு : வடதெற்கு விபரல் : குடிபுக.

ஆனி 16 திங்கள் மு. இ. 11 மணி 21 நி. முதல் 12 மணி 40 நி. வரை. இலக்கினம்: மீனம் திக்கு : வடதெற்கு விபரம் : குடிபுக.

ஆனி 25 புதன் மு. இ. 10 மணி 43 நி முதல் 11 மணி 50 மீனம் வரை. இலக்கினம்: மீனம் திக்கு : வடதெற்கு விபரம் : குடிபுக.

ஆனி 25 புதன் பி. இ. 2 மணி 19 நி. முதல் 3 மணி 29 நி. வரை. இலக்கினம் : இடபம் திக்கு : வடதெற்கு விபரம் : குடிபுக.

# திருத்திய கணிதஜோதிட நாசகாரிகள்

— விடாக்கண்டன் —

சோதிடம் என்பது வாழ்க்கையில் ஒரு பெரும்படியான காட்டியாகத் தொழிற்படுகின்றதேயன்றி, அது காட்டும் மாற்றங்களை உடனடியாக எந்த ஒரு மனிதனும் உணர்ந்து கொள்ளமுடியாது. இப்படி, அதனது மாற்றத்தை உடனடியாக உணர்கிறேன் என்று பறை சாற்றும் ஒருவன், அப்பட்டமான பொய்யைச் சொல்கிறான் என்பது தான் அர்த்தம்.

உதாரணமாக, காலை மணி 6.32க்குச் சூரிய உதயம் எனக் கணித்துக் கொண்டு விட்டால், அந்தச் சூரிய உதயத்தை நாம் சரியாக 6.32லிருந்துதான் அனுபவிப்போம் என்றும், அதற்கு முன் இல்லையென்றும் கூறுவது, ஆழமான அறிவு இன்மையால்தான். நடப்பது யாதெனில், உண்மையில் 6.32க்குத் தான் சூரியன் உதயமானாலும், அவனது தாக்கம் 6.32க்கு முன்னரே உலகில் பரவிவிடுவதை, அனுபவவாயிலாகக் கர்ணலாம். கிரகங்கள் எல்லாம், அவை மாற்றமடைகின்ற புள்ளியை நோக்கி மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் ஆகர்ணசக்தி, அவை மாற்றமடையுமுன்னரும், மாற்றமடைந்த பின்னரும், அப்புள்ளியைக் கடந்து செயற்பட்டு, நம்மால் அவற்றின் மாற்றங்களைத் திடீரென அறியமுடியாமற் செய்கின்றன.

உண்மையான சோதிடத்தில், கதிர்களைப் பரப்பும் கிரகங்களின் அசைவுகளும் மாற்றங்களும், இப்படி உடனடியாக உணர முடியாததாயிருக்க, இன்றைய திடீர் கணித வித்வான்கள், சுவிட்சைப் போட்டதும் திடீரென மின்விளக்கு குறித்த நேரத்தில் ஒளிர்வது போன்று, சோதிடக்கிரகங்களுக்குப் புதிய பாடங் கற்பிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. உண்மையை அறியாத பாமர ஜனங்கள் இதை நம்பி, சில காலம் இதன்வழி ஒழுகி, பின்பு சோதிடமே ஏமாற்றுவித்தை என, சோதிடப் பெரும் பொக்கிஷத்தையே சின்னாபின்னமாக்கி அழித்துவிடுவார்கள். எனவே, சோதிடத்தால் பயன் பெறுகின்ற மக்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும், விழிப்புணர்ச்சி வேண்டும். உண்மையை உள்ளபடி உணர்ந்துகொள்ளவேண்டும். சில தத்துவங்கள் உங்கள் தற்போதைய அறிவுக்கு எட்டாதவைகளாக இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் அறிவியல் மேதைகளான முன்னோர் கடைப்பிடித்து வந்த வழிமுறைகளை மாற்றமேதுஞ் செய்யாது நீங்கள் பின்பற்றவேண்டும்.

இவற்றை எழுதத்தூண்டியது யாதெனில், கடந்த 13-4-80 சித்திரை மாதசோதிடமலரில் காரம்பன் இளைப்பாறிய அதிபர் (சோதிடரல்ல) இ. கந்தையா அவர்கள் பதிப்புரிமை செய்து எழுதியுள்ள மகா தசா புத்தியும் அதன் சங்கியையும் என்ற பிழையான புதிய கணிதத் தொகுப்பாகும்.

பலாபலன்களைக் கூறுகின்ற சோதிடம் வேறு, பஞ்சாங்கங்களைக் கூறுகின்ற சோதிடம் வேறு என்று, அதிபர் அவர்கள் எண்ணியிருப்பது தவறான அபிப்பிராயமாகும். பஞ்சாங்க கணிதம் இல்லாமல் பலாபலன் கூறுகின்ற (கைரேகை, எண் தவிர்ந்த) சோர்திடமே இல்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். இதுவரைகாலமும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்திருந்து மக்களது மத்தியில் அழியாப் புகழ் பெற்றிருக்கும் பஞ்சாங்க கணிதமும், பலாபலன் சோதிடமும் பிரிந்து செல்வது தான் சரியானது என்று நிலைநாட்டுவது, பாரிய சோதிடக் கலைக்கே புரியப்படும் மகா துரோகமாகும்.

ஒரு வருடம் $365\frac{1}{4}$ நாள்களைக் கொண்டதெனப் பஞ்சாங்க கணிதம் கூறுகின்றது. இதை 12ஆல் வகுத்தால் ஒரு மாதம் 30·4375 நாள்களைக் கொண்டது என வரும். நான் ஆரம்பத்திலேயே கூறியது போன்று, கிரக மாற்றங்களையும், பலாபலன் மார்ற்றங்களையும், மிகவும் அச்சொட்டாக உணர முடியாமலிருப்பதால் 30.4375 என்பதை 30க்குக் கிட்டிய தசமதானமாக 30 என்று கொள்வது பொருந்தும். இதன் பிரகாரமே தான் பலாபலன்கள் 'கூறுகின்ற சோதிடத்தில் ஒருமாதம் 30 நாள்களைக் கொண்டது எனக் கணக்கிடுகிறார்கள். பஞ்சாங்க கணிதத்தில் இந்த மிகுதி 0.4375 ஐச் சேர்

செய்வதற்காக ஒரு மாதம் 30 என்று வந்தால் அடுத்த மாதம் 31 என்று வருவதைக் காணலாம்.

மொத்தத்தில் சூரிய மகாதெசை வருடம் 6 என்று, பலாபலன் சோதிடத்தில் தரப்பட்டிருப்பது முழுமையான பஞ்சாங்க வருஷத்தையே குறிக்கின்றது. பஞ்சாங்கங்கள் $365\frac{1}{4}$ நாள்களைக் கொண்டு வருஷப் பிறப்பான சூரியனின் மேடராசிப் பிரவேசத்தைக் கூறும்போது, நாம் பலாபலன் வருஷத்தில் $5\frac{1}{4}$ நாள்களைக் கழித்து, சூரியன் மீனத்தில் இருப்பது போன்று பலாபலன்களைக் கூறினால், எப்படி நடைமுறையில் பலன்கள் ஒத்துவரக் கூடியதாக இருக்கும்? எனவே இப்படியான ஏதோ ஒரு புதுமுறையைப் புகுத்திவிடவேண்டும். பாடுபடுகின்ற அடிப்படை ஆதாரமில்லாத திருத்திய கணிதர்களெல்லாம், சோதிட அபிமானிகளையும் பாழ்படுத்திய ஜோதிடத்தையே இந்த உலகத்திலிருந்து அழித்துவிட வந்திருக்கும் நாசகாரர்களாவார்கள். எனவே உண்மையான சோதிடத்தை அறிந்தவர்களும் சோதிடத்தில் பற்று மிக்கவர்களும் இவ்விஷயத்தில் விழிப்பாக இருந்துகொள்ளவேண்டும்.

# 13-3-80 'சோதிட மலர்'இல் வெளியான செய்திக்கு விளக்கம்

கடந்த 6-1-80 ஈழநாட்டு பத்திரிகைமூலம் ஜோதிடர்கள் கூறுவார்களா? என்று நான் கேட்ட கேள்விக்கு 13-3-80ல் தான சோதிடமலர் மூலம் ஒருபுலவர் பதில் தந்திருக்கின்றார் ஆற்றில் போட்டு குளத்தில் தேடிய கதை போல ஈழநாடுப்பத்திரிகையில் கேள்வி கேட்டபின்பு மாதப்பத்திரிகைகளில் தான் பதில் தேடவேண்டும்போல் தெரிகிறது.

எனது கேள்வி, இந்திய தேர்தல் முடிந்த பின்பு ஜோதிடம் மெய்த்தது என்றுபுதினப் பத்திரிகைகளில்விளம்பரம்செய்து கொண்ட ஜோதிடர்கள் தற்போது ஈரானில் இருந்து வரும்அமெரிக்ககைதிகளின் நிலையைத் தெளிபடுத்துவார்களா என்பதுதான். ? இப்படி யார் யார்செய்தார்களோ அவர்கள் மட்டும் கவனித்துக் கொள்ள வேண்டிய விஷயம் தான் இது.

புலவர் இதர்குப் பதில்தர முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இந்திராகாந்தியின் ஜெனனகால நேரங்கள் கிடைத்தமையால் அவரது பலாபலன்களை அவர் பிரதமராக வருவார் என்று கூறியிருந்தார்களாம். ஆனல் பயணக்கைதிகளின் ஜாதகம் தெரியாமல் அவர்களைப்பற்றி ஒன்றும்கூறமுடியாதென்று இலகுவாக முடித்துவிட்டார்.

புலவர்ஐயா பிறந்த நேரத்தைவிட்டு ராசிகளைக்கொண்டும் பலன்கள் கூறிவருகின்றார். இலங்கையின் ராசி கும்பமென்றும், கும்பராசியில் கிரகணம் நிகழ்ந்தமையால் இலங்கைக்குக் கேடு என்றும் கூறுகிறார்கள். இலங்கைத்தமிழர்களை ஆளும் ராசி என்ன என்று ராசிகளை வைத்துக் கொண்டு பலன் கூறுகின்ற ஒரு கட்டுரை கூட எழுதி வருகின்றார். இப்படியாயின் அவர்கூறியது போன்றுஜெனனகால நேரமில்லாது கூறுகின்ற பலாபலன்களெல்லாம் குருடன் அடிதான் அடிக்கிறாரா? என்று எண்ணத்தோன்றுகிறது.

நான் கேட்ட கேள்விக்கும் வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் எதுவித தொடர்புமில்லாதிருக்க பதிலின் முடிவில் திடீரென வாக்கிய பஞ்சாங்கத்தைக் குறை கூற முற்பட்டுவிட்டார். இது அவரது மனத்தில் உள்ள குறைபாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

இன்றைய பிரச்சனை அமெரிக்கக் கைதிகளுக்கும் ஈரானிய மாணவர்களுக்கு மிடையில் உள்ள பிணக்கு அல்ல அமெரிக்க நாட்டிற்கும் ஈரான் நாட்டிற்கு மிடையில் உள்ள பிரச்சனையே. எனவே பல நாடுகளுக்கும் பலன் கூறும் புல்வர் ஐயா பயணக்கைதிகளைப் பிரதிநிதிதுவப் படுத்தும் அமெரிக்காவிற்கும் மாணவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஈரானுக்கும் நடைபெறப் போவது என்ன என்பதைத் தெளிவுபடுத்துவாரா? அல்லது இதற்கும் அமெரிக்க ஈரானினது ஜெனனகால நேரங்கள் தேவைப்படுமா? நாங்கள் எதிர்பார்ப்பது லக்கினஸ்புட பலாபலன்களை அல்ல, ராசிப் பலன்களைத்தான்.

ஜோதிட பலாபலன் சாஸ்திரநூலைக் கற்றுணர்ந்த பெரியோர்களுக்கு, ஒரு தர

வும் இடையாத பட்சத்தில் நிமித்த (ஆரூட) ஜோதிடம் என்று ஒருபகுதி ஜோதிடத்தில் இருப்பது தெரியும். இவைபற்றிய விளக்கங்களை ஜினேந்திரமாலை பிரச்சனாரூடம், பிரக்ஞானதீபிகை என்ற ஆரூட சாஸ்திர நூல்கள் விபரமாக எடுத்துரைக்கின்றன.

ஒரு விஷயத்தைப் பற்றி அறியத்தான் வேண்டுமென்றால், ஜோதிடத்தால் அறிய முடியாதென்று ஒன்றுமில்லை. பழையகாலத்தில் இதை நிரூபித்து காட்டியுள்ளார்கள். ஜோதிடர் தனக்குத் தெரியாவிட்டால் ஒதுங்கிக்கொள்ள வண்டுமேயன்றி ஜோதிடத்தால் முடியாதென்றுகூறுவது மிகப் பெரிய பாவம்.

பிற்குறிப்பு:

இந்த விளக்கத்தை இற்றைக்கு ஒருமாதத்திற்கு முன்பேயே சோதிடமலருக்கு அனுப்பிவைத்தும் அப்பத்திரிகை இவற்றை வெளியிடாமல் மூடி மறைத்துள்ளது. இதனால் அது ஜோதிட உலகில் ஒரு நடுநிலைமையானதல்ல. ஒருபக்கச் சார்பான பத்திரிகை எனவும், இதனால் உண்மைகள் வெளிவரமாட்டாதென்பதும் கண்கூடு.

*

# அழுவதா? சிரிப்பதா?

## 'சோதிடமல'ரின் பித்தலாட்டம்

## திருக்கணிதத்தின் திருகுதாளம்

அடுத்த தமிழக முதல்வர் கலைஞர் மு; கருணாநிதி என ஆணித்தரமாக அச்சுக்கோர்த்து சோதிட மலரில் உலகப்புகழ் பெற்ற சேர்திடக்கலாநிதி கே. என். நவரத்தினம் வெளியிட்ட சோதிடப்பலன் பொய்த்து விட்டது. குருடன் பெண்சாதிக்கு அடித்த மாதிரியாகிவிட்டது. சோதிடமலர் மூன்றாவது ஆண்டுமலரில் 'மீண்டும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களே என க. வை. கணேசமூர்த்தி ஊரெழுவாசி இனியாவது ஊகிக்காது, ஒருபக்கச்சார்பில்லாது தெய்வக்கலை சோதிடத்தை இழிவுபடுத்தாது, உண்மைவழி நின்று சோதிடத்தின் உண்மையை இனியாவது (உலகிற்கு உணர்த்தவும்; திருக்கணிதக் கணிப்புக்கள் உண்மையிலேயே சரியாயின் இப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றிக் கணிக்கப் பெற்றுபலன் கூறும்போது ஏன் கலைஞரின் சாதகபலன் தவறியது...! இதற்கு விடை கூற முடியுமா?.

அன்பன்
வி. ஏ: சிவராசா
வேலணை கிழக்கு
வேலணை.

---

**சோதிடபரிபாலினியின் சொல் தவறுவதில்லை**
**எப்பொழுதும் சொல்வது உண்மையே.**

# சிம்மலக்கினத்தில் பிறந்தவர்களி னது பலன்கள்

வதிரியூர் திரு. மு- கனகரத்தினம் எழுதுவது.

இக்கட்டுரையானது சிம்ம லக்கினத்தில் பிறந்தவர்களுக்குரிய இராசயோகம், தன யோகம், ஸ்தானபலம், சுப, அசுப தெசைகள்பற்றி ஆராயப்படுகின்றது. (மகம் பூரம் உத்தரத்து முதற்கால் உடையது சிம்மம்)

### லக்கின ஜாதகரின் சொரூபமும் குணங்களும்

ஜாதகன் சுகவாசி, சுகபோகி சங்கீதம் காவியம் ஆகியவற்றில் பிரியமுடையவராகவும், சண்டைக்கு அஞ்சாதவராகவும், பிதா குரு, குலதெய்வத்தில் அதிக பற்றுடையவராகவும் இருப்பார், சிவந்ததேகம் கொண்ட இவர் முற்கோபியாகவும் பின்னிரக்கமுடையவராகவும் இருப்பார்.

### ஜாதகரின் கண்டங்கள்

ஐந்தாம் வயதில் அக்கினியாலும் ஏழாம் வயதில் சுரம் பீடித்தலாலும் இருபத்திரண்டாம் வயதில் விஷபீடையும், இருபத்தைந்தாம் வயதில் ஜல கண்டமும் இருபத்தெட்டாம் வயதில் வெட்டுக்காயத்தாலும் இவர்களுக்குக் கண்டமும் நிகழும். இந்த லக்கினத்தை சுபர் பார்த்தால் எழுபது வருடம் சீவிப்பார்கள்.

### லக்கினத்திற்கு மாரகர், சுபர் விபரம்

புதன், சுபர் ஆகியவர்கள் பாவிகள் செவ்வாய் ஒருவனே யோகத்துக்குரியவன் செவ்வாயும், சுக்கிரனும் சேர்ந்தால் தீய பலனைச் செய்வார்கள். புதன் மாரகாதி என்றும் இங்கே குறிப்பிடாத கிரகங்கள் எல்லாம் மத்தியஸ்தர்கள் என்றும் அறிக.

### லக்கினத்தில் உதித்தோர்கட்கு கிரகங்கள் நற்பலன் கொடுக்கும் ஸ்தானம்

சூரியன்: 3,6 10, 11, ஆம் வீடுகளிலும்

சந்திரன்:1, 2. 4, 9' 10, 11 ஆம் வீடுகளிலும்

செவ்வாய்: 2,6 10, 11, ஆம் வீடுகளிலும்

புதன்: 4, 5, 7. 9, 10, .11, ஆம் வீடுகளிலும்

குரு: 2, 4, 5, 7-9' 10, 11ஆம் வீடுகளிலும்

சுக்கிரன்: 4, 5, 7. 9, 10 ஆம் வீடுகளிலும்

சனி: 3, 6, 9, 11 ஆம் வீடுகளிலும் நின்றால் உத்தம பலன்களைத் தவறாது செய்திடுவார்கள்.

### ராஜயோக லட்சணங்களின் விளக்கம்

லக்கினாதிபதி சூரியன் தனது வீடாகிய சிம்மத்தில் நின்றாலும் அல்லது 4, 7,10ஆம் வீடுகளில் நின்றாலும் 2, ஆம் அதிபதி புதன் 1 ஆம் வீடாகிய சிம்மத்தில் நின்றாலும் சூரியனும் புதனும் 1, 4, 8 இல் நின்றாலும் கேந்திரர்திகள் கோணாதிபதிகள் சேர்ந்தாலும சூரியனும், குருவும் 1 ஆம் 11ஆம் வீடுகளில் சோந்திருந்தாலும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் முன்பும் பின்பும் கிரகங்கள் இருந்தாலும் பாபர்களாகிய சனி, ராகு, கேது, 3, 6, 11 ஆம் வீடுகளில் நின்றாலும் ராஜயோக பலன்கள் உண்டாம்.

### லக்கினத்தில் ஜெனித்தோரின் உத்தியோகங்கள்

ஜனாதிபதி, பிரதமர் அரசியல்வாதி, கிராம நகர தலைமை அதிகாரிகள் போன்ற முக்கிய பதவிகள் கிட்டும். வியாபாரத் துறையிலும் குருத் தொழிலிலும் ஈடுபாடு கொண்டிருப்பர்.

### சூரிய மகாதெசை ஆண்டு 6.

சூரிய தெசையானது மேற் சொல்லிய ஜாதகர்களுக்குச் சிறப்பாய் நடக்கும்.

இத்தெசையில் செவ்வாய் அதிக விசேஷ பலனைச் செய்திடுவார். மற்றும் புத்திகள்சம பலன் கொடுக்கும். ஆனால் சூரியன் 6, 8, 12 ஆம் வீடுகளில் நின்றால் பலன்கள் மிகக் குறைவு.

## சந்திரன் மகாதெசை ஆண்டு 10.

சந்திரன் மகாதெசையானது மேற்கூறிய ஜாதகர்கட்குப் பொதுவாக விசேடபலனைக் கொடார். காரணம் இவர் விரயத்தானாதி பதியாய் இருப்பதேயாகும். இத்தெசையில் சந்திர புத்தி மிகக் கஷ்டத்தையும், செவ்வாய் புத்தி நன்மையையும் இராகு இருக்குமிடத்துக்கேற்ப பலனையும் வியாழன் சனி புத்திகள் சம பலனையும் புதன் கேது சுக்கிரன் அரைவாசிக் காலம் நன்மையையும் அரைவாசிக் காலம் தீமையையும் செய்வார்கள்.

## செவ்வாய் மகாதெசை ஆண்டு 7.

இத்தெசைநாதன் மேற்படி ஜாதகர்கட்கு 4 ஆம், 9ஆம் அதிபதியானபடியால் விசேட பலனைச் செய்திடுவார். இதில் சற்றேனும் ஐயமில்லை இராகு புத்தி ஸ்தான பலம் கொண்டு நன்மை செய்திடும், 3,6,10,11, ஆம் இடங்களிலும் நின்றால் அதிக பலன் கிடைக்கும். வியாழ புத்தி முற்பகுதி நன்மையும் பிற்பகுதி கஷ்டமும் சனி, புதன் புத்திகள் சம பலனும் கொடுப்பார்கள்.

## இராகு மகாதெசை ஆண்டு 18.

இராகு பகவான் விசேட யோகம் பெற்ற கிரகங்களின் வீட்டில் நின்றாலும் கன்னி, விருச்சிகம், மகரம், கடகம் மேடம் இராசிகளில் நின்றாலும் அதிக உத்தம பலனைச் செய்திடுவார். இவர் தீயோரோடு சேர்ந்தால் தீயபலனும், நல்லோரோடு சேர்ந்தால் நற்பலனும் செய்திடுவார்.

எத்திசையும் தன்னைத் தாம் பொசிக்கும் காலம் பலன் சிறக்காது அவ்வண்ணமே இராகு புத்தி சமம். வியாழ புத்தி முன் அரைவாசிக் காலத்தின் புத்தி நற்பலனும். பின் அரைவாசிக்காலத்தின் புத்தி தீமையும் உண்டாம். சனி, புதன், கேது, சுக்கிரன் புத்திகள் மேற்கூறிய வண்ணமே இருக்கும். ஆனால் செவ்வாய் புத்தி குறிப்பிடத் தக்க பலனைச்செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

## வியாழன் மகா தெசை ஆண்டு 16.

வியாழ பகவான் இச்சாதகர் சட்கு 5ஆம் 8,ஆம் வீடுகளின் ஆதிபத்தியம் பெற்றவர் இத்தெசையின் முற்பகுதியில் நன்மையும், பிற் பகுதியில் கஷ்டமும் ஏற்படும். வியாழ தெசையில் வியாழபுத்திக் காலத்தில் மத்திம பலன் உண்டாம். சனி, சுக்கிரன் முற்பகுதி தீமையும் பிற்பகுதி சமபலனும் உண்டு. புதன் என்றும் மத்திம பலன் செய்திடுவார். ஆனால் செவ்வாய் புத்தி விசேட பலனைச் செய்திடும். இராகு கேதுக்கள் நிலைமைக் கேற்ப பலன் செய்திடுவார்கள்.

## சனி மகாதெசை ஆண்டு 19.

சனி பகவான் மேற்படி சாதகர்கட்கு 6ஆம் 7ஆம் வீட்டின் ஆதிபத்தியங்களைப் பெற்றவர். 9ஆம் ஆதிபத்தியத்திற்கு இத்தெசையின் அரைவாசிக் காலம் கஷ்ட பலனும் 7ஆம் ஆதிபத்தியத்தியத்திற்கு மற்ற அரைவாசிக் காலம்நற்பலன் செய்திடுவார் இவர் தன்னைத் தானே பொசிக்கும் காலம் சாதகர்கட்கு மிகக் கஷ்டத்தைக் கொடுப்பார். புதன் புத்தி சமன். சுக்கிரன் புத்தி முற்பாகம் நன்று. பிற்பாகம் சமம். இராகு கேதுக்கள் ஸ்தானபலன் கொண்டு நன்மை செய்திடுவார்கள். சந்திரன் புத்தி அதம பலன் தரும். செவ்வாய் புத்தி உத்தமம் என்றும் அறிக.

## புதன் மகாதெசை ஆண்டு 17,

புதன் பகவான் வாக்குத்தானாதி பத்தியமும் இலாபத்தானாதிபத்தியமும் பெற்றவர். தெசையின் முற்பகுதியில் 2 ஆம் வீட்டின் பலனையும் பிற்பகுதியில் 11 ஆம் வீட்டின் பலனையும் செய்திடுவார், வாக்குத்தான பலத்துக்கு வாய்ச்சாதுரியமுடையவர் ஆனபடியால் எதையும் இலகுவாய்ப் பெறுவர், பிற்பகுதியில் அதிகலாயமும் பெறுவர் இராகு கேதுக்களின் புத்தியின் பலனை அவர்களின் நிலைமைக் கேற்ப அறியலாம். சுக்கிரன் புத்தி இங்கு குறிப்பிடத்தக்கது, சந்திரன் புத்தி தீய பலன், செவ்வாய் உத்தம பலன் வியாழபுத்தி முற்பகுதி நன்மையும் பிற்பகுதி என்று அறிக.

## கேதுமகாதெசை ஆண்டு 7.

கேதுவானவர் தனது பொருத்தமான இடங்களில் இருந்தால் நற்பலன் செய்திடுவார். அவருக்கு 3ஆம் 6ஆம், 10ஆம் 11 ஆம் இடங்கள் பொருத்தமானவையாகும். அவர் இவ்வீடுகளில் இருந்தால் மேற்படி திசைப்பலன் உத்தமம் எனலாம். இதுவுமல்லாமல் இவர் இராசயோகக் கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் அல்லது அவர்களின் வீட்

டில் இருந்தால் நற்பலன் நிச்சயம் கிடைக்கும். இவர் தெசை இவரின் புத்தி கஷ்ட பலன் கொடுக்கும். சுக்கிரன், சூரியன் புத்தி சமபலன். சந்திரபுத்தி தீயபலன். செவ்வாய் புத்தி நன்று. இராகு நிலைமைக்கேற்ப பலன் கொடுக்கும் வியாழன் முற்பகுதி நன்மைபிற்பகுதி தீமை. சனி புதன் புத்திகள் சமபலன்

### சுக்கிர மகா தெசை ஆண்டு 20.

சுக்கிரன் 8ஆம் 10 ஆம் அதிபதியானவர் முற்பகுதித் தெசையில் பிடிவாதம் உள்ளவர். தான் நினைத்ததைச் செய்து முடிக்க வேண்டும் என்று நினைப்பார். பிற்பகுதியில் சில வேளையில் அதிக பலனையும் அடைவார். இவர் தெசை இவருடைய புத்தி கஷ்ட பலன் கொடுக்கும். சூரியபுத்தி சம பலன், செவ்வாய் புத்தி உத்தமம். இராகு நிலைமை கேற்ப பலன். வியாழ புத்தி முற்பகுதி நன்று, பிற்பகுதி தீது. சனிபுத்தி முற்பகுதி தீது பிற்பகுதி நன்று புதன் புத்தியும் நன்று என்று அறிக.

### நான் கண்ட அனுபவம்

மேற்படி லக்கினத்தில் பிறந்த ஒருவரின் குடும்பம் மிகவும் ஏழையாய் இருந்தது, அவருக்கு 10 ஆம் வீடாகிய இடபத்தில் குரு சுக்கிரன், சூரியன் ஆகிய மூவரும் இருந்தனர். ஆரம்பத்தில் ஆசிரியத் தொழிலில்ஈடுபட்டார். பின்பு சில காலம் கமத்தொழிலில் ஈடுபட்டார், இப்பொழுது பெரும் செல்வந்தனாக வாழ்கிறார். இவருக்கு 10ஆம் வீட்டின் பலன் அதிக விசேடத்தைச் செய்தது என்றறிக. வேறு ஒருவருக்குச் சிம்ம இராசி உதயலக்கினமாகி அதில் சூரியனும். இராகுவும் இருந்தனர் இந்த லக்கினத்திற்கு 2ஆம் வீட்டில் புதனும் வியாழனும் இருந் இவர் சீவியகாலம் முற்றும் வியாபாரத்தொழிலில் ஈடுபட்டிருந்தார், இவரும் மிகச்செல்வம்படைத்தவராக வாழ்கின்றார். இவருக்கு 1 ஆம் 2ஆம்வீட்டின் உன்னத சக்தியே காரணமாகும்.

❁

---

மலராமல் காய்த்த பலாவும், மலர்ந்து காய்த்த மாவும் மலர்ந்தும் காயாமல் நின்றுவிட்ட பாதிரியும் கவிஞருடன் பேசின. ''உலகத்திலே எங்கள் ஜாதிமக்களும் இருக்கிறார்கள்'' என்றுதான் பேசியிருக்க வேண்டும். அந்தப் பேசாத பேச்சைக் கேளாமல் கேட்ட கவிஞர் உலகத்தாரிடம் பேசுகிற பேச்சினால் அவை வெளியிட்ட உண்மைகளைச் சொல்ல எண்ணினார். கவிஞராதலின் கவியாக வந்தது. ''மூன்றும் பேருக்குத் தெரியாமல் செய்யவேண்டிய காரியத்தை மௌனமாகச் செய்து விளம்பரமே இல்லாமல் வாழும் உத்தமர்கள் எப்படி இருப்பார்கள்''? என்று நாம் கேளாமலே கவிஞர், ''பலாமரத்தைப்போல் இருப்பார்கள்'' என்று சொல்கிறார். மாமரத்தின் இரகசியப் பேச்சைக் கேட்டது நினைவுக்கு வருகிறது. ''சிலபேருக்குச் செய்யப்போகிற காரியத்தைச் சொல்லிக்கொள்வதில் ஒரு திருப்தி. அவர்கள் சொன்னபடியே செய்கிறார்கள். இவர்களை உத்தமர்கள் என்று சொல்லமுடியாவிட்டாலும் அதமர்களல்ல, பலாமரச் சாதியைவிடச் சிறியவர்கள் மாமரங்கள்'' என்று சொல்கிறார். அடுத்தபடி பாதிரிமலர் நகையால் மயக்கிச் சிரித்துப் பேசிய பேச்சையும் அவர் உணர்த்துகிறார். ''வீண் ஆடம்பரமும் விளம்பரமும் செய்து இது செய்வேன் அதுசெய்வேன் என்று வாய்ப்பந்தல்போட்டுக் கடைசியில் ஒன்றும் செய்யாத கீழ்மக்கள் பாதிரி மரத்துக்கு அண்ணன் தம்பிகள்'' என்று பாடுகிறார்.

சொல்லாமலே பெரியர் சொல்லிச்செய்வார் சிறியர்
சொல்லியும் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

— கி. வா. ஜகந்நாதன்

ஒவ்வொரு நட்சத்திரத்திற்குமுரிய ஆனிமாத தாராபலமில்லாத தேதிகளைக் கீழே காண்க.

### அச்சுவினி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புநர் | 30-57 | 29-43 |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 23 | 9 | தி | சித்திரை | 6-35 | 00-24 |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 |
| ஜூலை 2 | 18 | பு | அவிட் | 18-41 | 21-28 |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 |
| 8 | 24 | செ | கார்த்தி | 52-53 | 58-47 |
| 10 | 26 | வி | மிருகசீரி | 49-23 | 50-42 |
| 12 | 28 | ச | புநர் | 50-11 | 49-11 |

### பரணி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 |
| ஜூலை 3 | 19 | வி | சதயம் | 15-16 | 18-41 |
| 7 | 23 | தி | அச்சுவி | 59-19 | 3-18 |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-53 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 |

### கார்த்திகை

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புநர்பூச | 30-57 | 29-43 |
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 |
| 23 | 9 | தி | சித்திரை | 6-35 | 00-24 |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 |
| ஜூலை 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 |
| 10 | 26 | வி | மிருக | 49-23 | 50-42 |
| 12 | 28 | ச | புநர்பூச | 50-11 | 49-11 |
| 14 | 30 | தி | ஆயிலிய | 55-47 | 52-21 |

### ரோகிணி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 |
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 |
| 28 | 14 | ச | மூலம் | 24 28 | 23-14 |
| ஜூலை 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11-28 |
| 8 | 24 | செ | கார் | 52-53 | 58-47 |
| 11 | 27 | வெ | திரு | 49-11 | 49-23 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 |

### மிருகசீரிடம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புநர் | 30-57 | |
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 |
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 |
| 29 | 15 | ஞா | பூராட | 24-33 | 24 28 |
| ஜூலை 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52 53 |
| 12 | 23 | ச | புநர் | 50-11 | 49-11 |
| 14 | 30 | தி | ஆயிலி | 55-47 | 52-21 |

### திருவாதிரை

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 |
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 |
| 30 | 16 | தி | உத்தரா | 23-30 | 24-33 |
| ஜூலை 6 | 22 | ஞா | அச்சுவி | 59 49 | 3-18 |
| 10 | 26 | வி | மிருகசீரி | 49-23 | 50-42 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 |

### புநர்பூசம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 |
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 |
| 29 | 15 | ஞா | பூரா | 24-33 | 24-48 |
| ஜூலை 1 | 17 | செ | திரு | 21-28 | 23-30 |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-23 |
| 14 | 30 | தி | ஆயிலிய | 55-47 | 52-21 |

### பூசம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 23 | 9 | தி | சிந்தி | 6-35 | 00-24 |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 |
| 30 | 16 | தி | உத்த | 23-30 | 24-33 |
| ஜூலை 2 | 18 | பு | அவிட்ட | 18-41 | 21-28 |
| 8 | 24 | செ | கார்த் | 52-53 | 58-47 |
| 12 | 28 | ச | புநர் | 50-11 | 49-11 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 |

### ஆயிலியம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 |
| 29 | 15 | ஞா | பூராட | 24-33 | 24-28 |
| ஜூலை 1 | 17 | செ | திரு | 21-28 | 23 30 |
| 3 | 19 | வி | சதயம் | 15-16 | 18-48 |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 |

### மகம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 23 | 9 | தி | சித்தி | 6-35 | 00-24 |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 |
| 30 | 16 | தி | உத்தரா | 23-30 | 24-33 |
| ஜூலை 2 | 18 | பு | அவிட் | 18-41 | 21-28 |
| 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 |
| 10 | 26 | வி | மிருக | 49-23 | 50-42 |
| 14 | 30 | தி | ஆயில்ய | 55-47 | 52-21 |

குறிப்பு: மு நா ஆர — முதல்நாள் ஆரம்ப நாடி விநாடி.

## பூரம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 | |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — | |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 | |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 | |
| ஜூலை 1 | 17 | செ | திரு | 21 28 | 23-30 | |
| 3 | 19 | வி | சத | 15-16 | 18-41 | |
| 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11-28 | |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-23 | |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 | |

## உத்தரம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 | |
| 23 | 9 | தி | சித்தி | 6-35 | 00-24 | |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 | |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 | |
| ஜூலை 2 | 18 | பு | அவிட்ட | 18-41 | 21-28 | |
| 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 | |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3 18 | 7-25 | |
| 12 | 28 | ச | புனர் | 50-11 | 49 11 | |

## அத்தம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 | |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 | |
| 24 | 10 | செ | சுவா | 12-17 | 6-35 | |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 | |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 | |
| ஜூலை 3 | 19 | வி | சதயம் | 15 16 | 18-41 | |
| 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11-28 | |
| 6 | 22 | ஞா | அச்சு | 59-19 | 3-18 | |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 | |

## சித்திரை

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 | |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 | |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — | |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 | |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 | |
| 29 | 15 | ஞா | பூரா | 24-33 | 24-28 | |
| ஜூலை 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 | |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 | |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 | |
| 14 | 30 | தி | ஆயிலிய | 55-47 | 52-21 | |

## சுவாதி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 | |
| 23 | 9 | தி | சித்தி | 6-35 | 00-24 | |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 | |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 | |
| 30 | 16 | தி | உத் | 23-30 | 24-33 | |
| ஜூலை 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11-28 | |
| 6 | 22 | ஞா | அச்சு | 59-19 | 3-18 | 6-ம் திகதி ஆர |
| 8 | 24 | செ | கார்த் | 52-53 | 58 47 | |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 | |

## விசாகம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 | |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 | |
| 27 | 13 | வெ | சேட் | 23-14 | 20-47 | |

## விசாகம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 29 | 15 | ஞா | பூராட | 24-33 | 24-28 | |
| ஜூலை 1 | 17 | செ | திருவோ | 21-28 | 23-30 | |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 | |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 | |
| 9 | 25 | பு | ரோகி | 50-52 | 52-53 | |

## அனுஷம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 | |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 | |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 | |
| 30 | 16 | தி | உத்தரா | 23-30 | 24-33 | |
| ஜூலை 2 | 18 | பு | அவிட்ட | 18-41 | 21-28 | |
| 6 | 22 | ஞா | —— | 3-18 | — — | |
| | | | அச்சு | 59-19 | — — | |
| 8 | 24 | செ | கார்த் | 52-53 | 58-47 | |
| 10 | 26 | வி | மிருகசீரி | 49-23 | 50-42 | |

## கேட்டை

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | 53-56 | |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — | |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17 05 | |
| 29 | 15 | ஞா | பூராடம் | 24-33 | 24-28 | |
| ஜூலை 1 | 17 | செ | திரு | 21-28 | 23-30 | |
| 3 | 19 | வி | சத | 15-16 | 18 41 | |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 | |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 | |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-23 | |

## மூலம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புனர் | 30-57 | — — | |
| 23 | 9 | தி | சித்தி | 6-35 | 00-24 | |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 | |
| 30 | 16 | தி | உத் | 23 30 | 24-33 | |
| ஜூலை 2 | 18 | பு | அவி | 18-41 | 21-28 | |
| 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 | |
| 8 | 24 | செ | கார்த் | 52-53 | 58-47 | |
| 10 | 26 | வி | மிருகசீரி | 49-23 | 50-42 | |
| 12 | 28 | ச | புனர் | 50-11 | 49-11 | |

## பூராடம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 | |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 | |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 | |
| 1 | 17 | செ | திருவோ | 21-28 | 23-30 | |
| 3 | 19 | வி | சதய | 15-16 | 18-41 | |
| 5 | 21 | ச | உத்தரட் | 7-25 | 11-28 | |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 | |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-23 | |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 | |

## உத்தராடம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா | ஆர |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புனர் | 30-57 | — — | |
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 | |
| 25 | 11 | பு | விசாகம் | 17-05 | 12-17 | |
| 29 | 15 | ஞா | பூராட | 24-33 | 24-28 | |
| ஜூலை 2 | 18 | பு | அவிட்ட | 18-41 | 21-28 | |
| 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 | |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 | |
| 10 | 26 | வி | மிருக | 49-23 | 50 42 | |
| 12 | 28 | ச | புனர் | 50-11 | 49-11 | |

### திருவோணம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-59 |
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 26 | 12 | வி | அனுஷம் | 20-47 | 17-05 |
| 30 | 16 | தி | உத்த | 23-30 | 24-33 |
| ஜூலை 3 | 19 | வி | சதய | 15-16 | 18·41 |
| 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11-28 |
| 6 | 22 | ஞா | —— | 3-18 | |
| | | | அச்சுவி | 59-19 | |
| 11 | 27 | வெ | திருவா | 49-11 | 49-23 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50·11 |

### அவிட்டம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | புனர்பூச | 30-57 | — — |
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 |
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 |
| 27 | 13 | வெ | கேட் | 23-14 | 20-47 |
| ஜூலை 1 | 17 | செ | திருவோ | 21-28 | 23-30 |
| 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 |
| 12 | 28 | ச | புனர்பூச | 50·11 | 49-11 |
| 14 | 30 | தி | ஆயிலிய | 55-47 | 52-22 |

### சதயம்

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 16 | 2 | தி | பூசம் | 23-27 | 30-57 |
| 18 | 4 | பு | மகம் | 41-53 | 37-10 |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 28 | 14 | ச | மூலம் | 24-28 | 23-14 |
| ஜூலை 2 | 18 | பு | அவிட்ட | 18·41 | 21-28 |
| 5 | 21 | ச | உத்தர | 7-25 | 11 28 |
| 6 | 22 | ஞா | —— | 3-18 | — — |
| | | | அச்சு | 59-19 | — — |
| 8 | 24 | செ | கார் | 52-53 | 58-47 |
| 13 | 29 | ஞா | பூசம் | 52-21 | 50-11 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 |

### பூரட்டாதி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 17 | 3 | செ | ஆயிலிய | 37-10 | 23-27 |
| 19 | 5 | வி | பூரம் | 47-41 | 41-58 |
| 20 | 6 | வெ | —— | 53-56 | — — |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | — — |
| 22 | 8 | ஞா | அத்தம் | 00-24 | — — |
| 29 | 15 | ஞா | பூராட | 24-33 | 24 28 |
| ஜூலை 3 | 19 | வி | சதயம் | 15-16 | 18-41 |
| 6 | 22 | ஞா | ரேவதி | 3-18 | 7-25 |
| 7 | 23 | தி | பர | 58-47 | 59-19 |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 |
| 14 | 30 | தி | ஆயிலிய | 55-47 | 52-21 |

### உத்தரட்டாதி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 20 | 6 | வெ | உத்த | 53-56 | 47-41 |
| 23 | 9 | தி | சித் | 6-35 | 00-24 |
| 30 | 16 | தி | உத்தரா | 23-30 | 24-33 |
| ஜூலை 4 | 20 | வெ | பூரட் | 11-28 | 15-16 |
| 6 | 22 | ஞா | —— | 3-18 | — — |
| | | | அச்சு | 59-19 | —— |
| 8 | 24 | செ | கார்த் | 52-53 | 58-47 |
| 10 | 26 | வி | மிருக | 49-23 | 50-42 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-47 |

### ரேவதி

| யூன் | ஆனி | வார | நட்சத் | நாவி | மு நா ஆர |
|---|---|---|---|---|---|
| 18 | 4 | பு | மகம் | 41-58 | 37-10 |
| 20 | 6 | வெ | —— | 53-56 | — — |
| 21 | 7 | ச | அத்தம் | 60-00 | — — |
| 22 | 8 | ஞா | அத்தம் | 50-24 | — — |
| 24 | 10 | செ | சுவாதி | 12-17 | 6-35 |
| ஜூலை 1 | 17 | செ | திருவோ | 21-28 | 23 30 |
| 5 | 21 | ச | உத்த | 7-25 | 11-28 |
| 7 | 23 | தி | பரணி | 58-47 | 59-19 |
| 9 | 25 | பு | ரோகி | 50-42 | 52-53 |
| 11 | 27 | வெ | திரு | 49-11 | 49-23 |
| 15 | 31 | செ | மகம் | 60-00 | 55-57 |

12 ஆம் நாள் 1 ஆம் காலும், 14 ஆம் நாள் 4 ஆம் காலும், 16 ஆம் நாள் 3-ம் காலும் தாராபலமில்லாத நாட்கள்.

படுபக்ஷி வாரங்களும் தாராபலமில்லாத நாட்களும், வைநாசிக நாளும், பகைநாளும் அட்டமராசி நாட்களும் சுபகருமங்களுக்கு ஆகாவாம்.

ஒவ்வொருவனும் கஷ்டம் வந்தாலும் தன் தகுதிக்கு ஏற்ற பொருளையே விரும்புகிறான் ஒரு நாய்க்கு மாமிசமற்றதும் ஏதோ கொஞ்சம் பசை கொண்டதுமான மாட்டின் வெள்ளெலும்புத் துண்டு ஒன்று கிடைத்து விட்டால், அது தன் பசியைப் போக்காவிடினும் அந்தத் துண்டைக் கொண்டு நாய் சந்தோஷம் அடைகிறது. சிங்கமோ தன் பிடியில் அகப்பட்ட நரியை அசட்டையாகவிட்டுவிட்டு யானையைக் கொல்லும்!

நாய்க்கு ஒருகவளம் எச்சிலைப் போட்டுவிட்டால் அது வாலைக் குழைத்து அவன் காலடியில் விழுந்துபுரண்டு வயிற்றை எக்கிக்கொண்டு முகம் காட்டிநிற்கும். ஆனால் யானையோ தன் கம்பீரத்தை விட்டுக்கொடுக்காமல் பாகன் வேண்டி வலிய உபசாரம் செய்தால்தான் சாப்பிடும்.

# எண்கள் புரியும் விந்தைகள் பாரீர்!

ஆ. சிவராசா, சோதிடர் — வேலணை.

எண்ணும் எழுத்தும் கண்கள்எனத் தகும் என்றுள் ஔவைப்பிராட்டி. மனிதர்களின் நல்வாழ்வுக்காக உலகத்தையே வசப்படுத்தித் தந்துள்ளேன் என்றுர் நபிகள்நாயகம். உலகம் என்பது கிரகங்களையே குறிப்பிடும். வான் இல்லாமல் உலகவாழ்வு அமையாது என்கிறுர் வள்ளுவர். மேலும் ஒருபடி முன்னேறிய வள்ளுவர்பெருமான் ''முயற்சி திருவினையாக்கும்'' என்றுர். விதிவழிதான் ஒருவரின் வாழ்க்கை நடக்கும் என்றுல் அதிஷ்ட எண்களுக்கு ஒருவரின் பெயரை மாற்றி எப்படி விதியின் பாதையை விலத்தி நடக்க முடியும்...? விதிவிலக்கு என்ற ஒன்று இருப்பதை யாராலும் மறக்கமுடியாது. பதினறு வயதுடன் ஆயுள் முடிந்த மார்க்கண்டேயர் இறைவன் அருள் பெற்றுத் தன் ஆயுளை நீடித்தார்: சத்தியவானின் பிரிந்துசென்ற உயிரை சாவித்திரி வாதாடிப் பெற்றுள். குணப்படுத்த முடியாத நோய்களெல்லாம் நவீன வைத்தியத்தின் வளர்ச்சியினுல் தீர்க்கப்படுகின்றன. செயற்கைப் பரிசோதனைக் குழாய்மூலம் குழந்தை கூடப் பிறந்துவிட்டது. எப்பாடு பட்டாவது எனக்கு நல்வாழ்வு கிடைக்கவேண்டுமென்ற ஆர்வமே இன்றைய மனிதனின் நாகரிக வளர்ச்சி எனவே அறிவின் துணை கொண்டு ஒருவன் இவ்வுலகத்தில் சிறந்த நிலையை அடைவதற்கு வழிகாட்டுவதே எண்சோதிடக்கலை.

விதியின் கொர்டூரத்தினுல் தாக்கப்பட்டவனுக்கு கைகொடுத்துதவுகின்றது எண்கலை. நீந்தத்தெரியாது தண்ணீருக்குள் விழுந்தவனுக்கு மரக்கட்டையாக வந்து அவன் உயிரைக் காப்பாற்றுகின்றது எண்விஞ்ஞானம். நோய்வாய்ப்பட்டவனுக்கு மருந்து தான் எண்சோதிடம். விழுந்து எலும்பு முறிந்தவனுக்கு புக்கை கட்டுவது தான் இச்சோதிடம். தலைவலிக்குமாத்திரை தான் எண்சாத்திரம். சோதிடத்தை நம்பாதவர்கள் கூட இன்று மனிதர்கள் மத்தியில் எண்கள் கொண்டுள்ள தொடர்பைக் கண்டு அதிசயமும் ஆச்சரியமும் அடைகின்றனர். திரு. எம். ஜி ராமச்சந்திரன் அவர்கள் 17 ம் திகதி பிறந்துள்ளார். 1 எண் சூரியனையும் 7 எண் கேதுவையும் 1+7 8. எண் சனீஸ்வரனையும் குறிக்கும். வெற்றியைக்குறிக்கும் இரண்டு விரல்களைக் காட்டி (அதாவது VICTORY) தேர்தல் பிரசாரம் செய்தார் 2 எண் சந்திரனைக் குறிக்கும். இனி விடயத்திற்கு வருவோம். 1 எண் சூரியனைப்போல் புகழைக் கொடுத்தது. 7 எண் பூர்வபுண்ணிய பலன் போலும் எத்தகைய தடைகள் எதிர்ப்புகள் இருப்பினும் அவற்றையெல்லாம் துச்சமென மதித்து எடுத்த முயற்சிகளில் வெற்றியைக்கொடுத்தது. 8 எண் அரசியலில் பலம் பெற, அதாவது ஜனநாயகத் தலைவனுன சனீஸ்வரன் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில்உள்ளவர்களின் பக்கமே எப்பொழுதும் நிற்பான்: அதேபோல எம். ஜீ. ஆர். அவர்களுக்குக் கிடைத்த தேர்தல் தொகுதி வெற்றிகளை நோக்குமிடத்து. கிராமப் புறத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களின் ஆதரவே கிடைத்தது. தி. மு, க விற்கு அதாவது கலைஞர் மு. கருணநிதி அவர்களுக்கு 3 எண்காரரான இவருக்கு 3 எண் குரு, அதாவது படித்தவர்களைக் குறிப்பிடும் சென்னைநகர் போன்றவற்றில் உள்ளோரின் வாக்கே கிடைத்தது. எம். ஜி ஆரின் 2 விரல்களைக் காட்டும் சூட்சும மந்திரத்தை அறிவுக்கண் கொண்டு பார்க்கின் 2 எண் மனதை மயக்கிக் கொள்ளையிடும் சந்திரனை குறிக்கும். பெண்களே எம் ஜி ஆரின் பெரும்பான்மை வாக்காள நாயகிகளாக இருப்பதைப் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம். எனவே ஒரு மனிதனின் உயர்விற்கு எந்தளவு தூரம் எண்கள் துணைபுரிகின்றன என்பதற்கு இச்சிறு எடுத்துக்காட்டே சான்று.

உனக்குக் கஷ்டம் வரும்போதுதான் கடவுளுக்குக் கண்ணில்லை என்ற ஆராய்ச்சியும் பிறக்கின்றது, முதலில் உங்களது பெயர் அதிஷ்ட எண் என்ற கண்ணில் அமைந்துள்ளதா என்ற ஆராய்வினைத் தொடருங்கள். சால்டியன் என்ற அறிஞன் வகுத்து உலகிற்கு அளித்த எண் எழுதிதுப் பெருமானமே எண்ணியல் விஞ்ஞான சோதிடக்

களுக்கு திறவுகோலாகும். ஆங்கில எழுத்துக்கள் 26, இந்த 26 எழுத்துக்களுக்கும் சால்டியன் எண்களைக் கண்டுபிடித்துள்ளார். அவை பின்வருமாறு :

1—A, I, J, Q, Y
2—B, K. R,
3—C, G, L, S,
4—D, M, T,
5—E, H, N, X
6—U, V, W
7—O, Z,
8—F. P

வி. ஆறுமுகம் என்று ஒருவர் கையெழுத்திடுகின்றாரென எடுப்போம். 'இதை ஆங்கில எழுத்துகளில் அமைத்து அதற்குரிய எண் பெறுமதிகளையும் இடும்போது 33 எண் வருகின்றது,

V. ARUMUGAM
6 1 2 6 4 6 3 1 4 = 33

ஒவ்வொரு திகதிகளிலும் பிறக்கின்றவர்கள் தமது கையெழுத்து எண்களை எந்த எண்ணில் வைத்தால் அதிஷ்டசாலியாகலாம் என்பதே இன்றைய கேள்வி 1 தொடக்கம் 31 திகதி வரை பிறக்கின்றவர்களின் குணம், திறமை, தொழில் திருமணம் நோய் இப்படிப்பட்ட எல்லாத்துறைகளிலும் வித்தியாசங்கள் இருந்தாலும் உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரையும் எண் சோதிடம் 9 எண்காரர்களாக வகுக்கின்றது.

| எண்காரர்கள் | பிறந்த திகதிகள் |
|---|---|
| 1 | 1, 10, 19, 28, |
| 2 | 2, 11. 20, 29, |
| 3 | 3, 12, 21, 30 |
| 4 | 4, 13, 22, 31, |
| 5 | 5, 14, 23, |
| 6 | 6, 15, 24, |
| 7 | 7, 16, 25, |
| 8 | 8, 17, 26, |
| 9 | 9, 18, 27, |

உங்கள் பிறந்த திகதியை மட்டும் சரியாக தெரிந்து இருந்தால் போதும் எண் சோதிடமூலம் உங்கள் வாழ்வினை மறுமலர்ச்சியடையச் செய்யலாம். சில சமயங்களில் உங்களின் பிறந்ததிகதி தெரியாது போகலாம்; இதற்காக கவலைப்படவேண்டாம்; சில அவதானிப்புகள்மூலம் உங்கள் பிறந்த திகதியைக் கண்டுபிடிக்கலாம்; எப்படியெனின், வருகின்ற நோய்கள், கிடைக்கின்றநண்பர்கள் முக்கிய நிகழ்ச்சிகள் நடக்கின்ற ஆண்டுகள், அமைகின்றமனைவி, விருப்புகின்ற நிறம் செய்யும் தொழில் போன்றனமூலம் பிறந்ததிகதி எதுவென நிச்சயித்துக்கொள்ளலாம்.

பிறந்ததிகதி தெரியாத ஒருவருக்கு இளம் வயதில் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழத்தல், நீலஉடைகளில் ஆசைப்படுதல், 4, 13, 22, 31, ஆகிய திகதிகளில் பிறந்தோரை நண்பர்களாகக் கொள்ளுதல், அநியாயங்களைக்கண்டு கண்டித்தால், சோகம் அல்லது விரக்தி, அல்லது ஏக்கம் நிரம்பிய முகபாவம், முன்னேற துடிக்கும் தன்மை, துரதிஷ்டம், என்பன இருப்பின் நிச்சயம் 26ம் திகதி அவர் பிறந்தவரெனக் கொள்ளலாம். ஒருவரின் பெயர் எண்கள்மட்டும் அதிஷ்ட எண்களுக்கு அமைந்துவிட்டால் போதும், கையெழுத்தெண்களைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்கின்றனர். எண்ணியல் ஆராய்வின்படி பெயர் எண்கள் மாத்திரமல்ல, கையெழுத்தெண்களும் அதிஷ்டஎண்களாக அமையவேண்டும். ஆ. இரத்தினராசா என்பவரின் பெயரெண்களின் கூட்டுத் தொகை 23 ஆகும்.

RATNARAJAH
2 1 4 5 1 2 1 1 1 5 = 23
அதிஷ்டஎண்.

ஆ. இரத்தினராசா என்ற கையெழுத்தெண்கள் 24 ஆகும்.

A. RATNARAJAH
1 2 1 4 5 1 2 1 1 1 5 = 24
எனவே.

ஒருவரின் பெயர் எண்களின் கூட்டுத்தொகையும் கையெழுத்தெண்களின் கூட்டுத்தொகையும் அதிஷ்டஎண்களாக அமையவேண்டும்.

சிலரின் கையெழுத்தெண்கள் மட்டுமே அதிஷ்டஎண்களில் அமைந்திருக்க பெயர் எண்கள் துரதிஷ்டஎண்களில் கொண்டிருக்கும். எண்சோதிடரீதியில் பின்வரும் எண்

களைத் துரதிஷ்டம் வாய்ந்த எண்களாகக் கொள்ளப்படுகின்றன.

| எண்ணினம் | அதிஷ்டமற்றஎண்கள் |
|---|---|
| 1 | 28 |
| 2 | 29, 38, 47, 56, 65, 74, 83, 92, 101 |
| 3 | 39, 48, 57, 66, 75, 85, 93 102 |
| 4 | 13, 31 49, 58, 67, 76, 85, 9 |
| 5 | 32 |
| 6 | 33 |
| 7 | 16, 25, 34, 43, 52, 61, 70, 88, 97, 106 |
| 8 | 26, 35, 44, 53, 62, 71 80, 89, 98, 107 |
| 9 | 18, 36, |

ஆனந்தி என்ற பெயரின் கூட்டெண் 22 ஆகும்.

A N A N T H I
1 5 1 5 4 5 1 = 22. எண்களின் பலத்தைப் பொறுத்து 22 துரதிஷ்டம் வாய்ந்து, தோல்விகளை அனுபவிக்கச் செய்கிறது. எனவே ஆனந்தி என்ற பெயரை அதிஷ்டகரமாக்க ஒரு A யைச் சேர்க்கலாம்.

A A N A N T H I
1 1 5 1 5 4 5 1 = 23

அல்லது

A N A N T H I E
1 5 1 5 4 5 1 5 = 27

என எழுதலாம்.

சிறீ என்ற பெயரை பலவாறு எழுதமுடியும். SRI, SIRI, SHIRI. SRIE, SREE, அழகேசன் என்ற பெயரை ALAKESAN, AZHAKESAN என இரு விதங்களில் எழுதமுடியும். (ழ) என்பதை ஆங்கிலஎழுத்து AZHA, LA என்பன குறிப்பிடும். சிலர் தமது பிறந்த ஊரின் முதலெழுத்தையும் சேர்த்து அதிஷ்டஎண்கள் வரத்தக்க விதத்தில் கையெழுத்திடுகின்றனர். பெங்களூர் வெங்கட்ராமன் என்பது.

B. V. RAMAN என எழுதப்படுகின்றது. உங்கள் பிறந்ததிகதி மாதம், ஆண்டு பிறந்த நேரம் என்பனவற்றை இனி ஒருக்காலும் மாற்றவேமுடியாது; ஏனெனில் நடந்த நிகழ்ச்சி நடந்ததுதான். இந்துக்கள் மறுபிறப்புக் கொள்கைகளை நம்புகின்றனர்; முற்பிறப்புக்கேற்பவே இப்பிறப்பு நமக்குக் கிடைத்திருக்கின்றது என்பதில் ஆணித்தரமான அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே இமயமலையை ஒரு தடிகொண்டு புரட்ட எத்தனிப்பது போல் கேவலம் ஒருவரின் பெயரினை ஒரு சில எழுத்துக்களைக் கூட்டுவதன்மூலமோ, அன்றிக் குறைப்பதன்மூலமோ, அதிஷ்ட எண்களுக்கு மாற்றி விதியின் பாதிப்பினின்றும் விடுபடமுடியுமோ? ஆக்கிமிடிஸ் விஞ்ஞானி கூறுகின்றான். 'உலகத்திற்கு வெளியே நிற்பதற்கு எனக்கு ஓர் இடம்கிடைத்துவிட்டால்போதும் நெம்புகோலின் உதவியுடன் இந்தப்புவியையே புரட்டிவிடுவேன்'' நெம்புகோல் ஓர் சிறு உபகரணம் புவியோ அளவிடற்கரிய பொருள். அறிவின் துள்ளல் இங்கு வெற்றி நடைபோடுகின்றது. உலகில் அனுபவமும்ஆராய்ச்சியும்கொண்டு நிரூபிக்கப்படாமல் எத்தகைய உண்மைகளையும் என்றும் எப்பொழுதும் மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. எண்சோதிடத்தின் உண்மைகள் எந்தளவிற்கு யதார்த்தம் கொண்டுள்ளன என்பதை இன்று இச்சோதிடத்தை நாடி தமது அல்லல்களைப் போக்க ஓடிவரும் மக்கட்கூட்டமே இதற்குச் சான்று. 'கலைவிஞ்ஞான தத்துவ மெய்யியல் உளவியல் நம்பிக்கையில் கட்டி எழுப்பப்பட்டு மாறாப்பேருண்மைகளை தன்னகத்தே அடக்கி மக்களின் எத்தகைய பிரச்சினைகளுக்கும் எண்ணின் அடிப்படையில் தீர்வுகாணும் எண்ணியல் சோதிடமூலம் எவரும் தமது பெயர் எண்களை அதிஷ்டகரமாக்கி அதிஷ்டசாலிகளாக முடியும்.

—தொடரும்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு".

— குறள்.

# எம். ஜி. ஆர். வெற்றி

## வாக்கிய பஞ்சாங்கமே சிறந்தது

### என்பதைச் சாற்றுகின்றது

| | | | |
|---|---|---|---|
| 2 | குரு | 4 | கேது |
| ல. | எம். ஜி. ஆர். | | சனி |
| சூரியன் செவ் புத | 17—1—1917 | | 7 |
| சுக்கிரன் ராகு | 10 | சந் | 8 |

சினிமா நட்சத்திரம் சிறந்த கொள்கைகளை மக்கள் உள்ளத்தில் விதைத்து உலக சரித்திரத்தில் கூத்தாடி பிரதமரானது M. G. R. 'பலமுள்ளதே வாழும்' இது பரிணாமக்கோட்பாட்டுத் தந்தை சாள்ஸ் டார்வின் தத்துவம். மிருகங்கள் தாவரங்களைப் பொறுந்தவரை உயிர் வாழத் தகுந்த சூழல் இல்லாவிட்டரல் அழிவு நிச்சயம். ஆனல் மனிதனின் பிறந்தநேர கிரகஜாதகம் மட்டும் வலிமையுடைத் தாயின் அவன் எம். ஜி ஆர். தான். எம். ஜி ஆர். பற்றிய பிறப்பிட வரலாறு மயக்கமாக உளது. இலங்கையில் பிறந்தவராம். வேறு சிலர் மலையாளியாம். எப்படி இருந்தாலும் எம். ஜி; ஆர். தமிழ்த் திராவிடன்- அது ஒன்றேபோதும் தமிழராகிய எமக்குப் பெருமை. மறைந்த மாமேதை வி; ஐ. லெனின் சொன்னர் 'சினிமாவும் ரேடியோவும் உலக அரசியல் போக்கை மாற்றும். இக்கூற்றின் யதார்த்த புருடன் எம், ஜி, ஆர் இவர் அடைந்த வெற்றியின் ஏணிப்படிகளே அவர் நடித்த திரைப்படங்கள்.



ஈழத்திலே வாழும் தமிழ் மக்களுக்கு எம். ஜி. ஆர். அரசியல் துறையில் ஆதரவு தருவதில்லை என்ற நோக்கில் மட்டும் தான் எம். ஜீ. ஆர். திரும்பவும் பதவிக்கு வரக்கூடாது என இலங்கையர் பலர் எதிர் பார்த்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலர்ளர் நாயகம், எதிர்க்கட்சி முதல்வர் திரு. ஏ, அமிர்தலிங்கம் அவர்கள் மு. கருணாநிதியே முதலமைச்சர். எனவே தன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக ஈழப் பயணத்தை ஒத்தி வைத்தார். நிலைமை தலைகீழ். சாவகச்சேரி பிரதிநிதியும் "ஈழத் தமிழன் என்ற கோதாவில் கலைஞர் மு. கருணாநிதியைத்தான் எதிர்பார்த்தேன்." என்றதும் குறிப்பிடத்தக்கது. "ஆண்டியும் அரசனும் விதியின் முன்னாலே தன்னிலை இழப்பார் ஊழ்வினையாலே" எம். ஜி. ஆர்; கருணாநிதியை விட முற்பிறப்பிலே நற் செயல்களில் ஈடுபட்டவர் போலும். முற்பிறப்பு இப்பிறப்பு, மறுபிறப்புக் கொள்கைகளை இந்துக்கள் நம்புகின்றனர். ஊழ்வினை வந்து உறுத்தும் என்கிறதல்லவா சிலப்பதிகாரம்.

சோதிடமலர் என்னும் சஞ்சிகையிலும் அமெரிக்க டெலிவிஷன்களிலும் தோன்றியும் உலகத்தலைவர்களது வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் என் கூற்றே காரணம்; எனது திருக்கணிதக்கணிப்பே சரியானது என்று கூறி வரும் K.N. நவரத்தினம் A. F. A 14-8-1980 சோதிடமலரில் எம். ஜி. ஆர் எனத் தலைப்பிட்டு "உயர்திரு எம். ஜி. இராமச்சந்திரனின் சாதகத்தில் இவருக்கு 5-2-1980 தொடக்கம் 5-ல் இருந்த கேதுவின் மகா தெசை ஆரம்பமாகியுள்ளது. கேது தசாம்சத்தில் 8-ல் வீற்றிருப்பதால் மதியிழந்து மானமிழந்து, தோல்வி காண்பார். கேது

வின் சஞ்சாரம் கோட்சாரத்தில் 12-ம் வீட்டில் சூரியன், புதன், செவ்வாய், இந்திரன் முதலிய பாரியகிரகங்கள் யாவும் 6-6·1980 ன்மேல் செல்வதால் பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணும். அதேஇதழில் 'தமிழ்நாடு தேர்தல்' என்ற தலைப்பில் கலைஞர் உயர்திரு மு. கருணாநிதியே அடுத்துவரும் தமிழ்நாட்டுத் தேர்தலில் வெற்றி அடைந்து முதலவராவார். இவருடைய சாதகத்தில் சனிதிசையில் குருபுத்தி குரு 5-ம்ராசியாகிய மந்திரிப்பதவியைக் குறிக்கும். ராசியில் கேசரியோகம் பெற்று, ஒன்பதாதிபதியாகி 10-ல் சிறப்புடன் இருப்பதினுலும் புதனின் நட்சத்திரத்தில் சாத்வீககுணம் பெற்று இருப்பதனுலும் முதல் மந்திரியாவார்.

சோதிடம் பொய்த்ததில்லை. ஆனுல் நவரத்தினத்தன் மூளைக்கு ஏதாவது ஏற்பட்டிருக்கவேண்டும். அல்லது திருக்கணித டஞ்சாங்கத்தின கணிப்புக்களில் உண்மைகள் இல்லாமல் இருக்கலாம். சோதிடமலர் மூன்றுண்டுமலரில் ஊரெழு க வை. கணேஷமூாததி (கடவுளே பாவம; தடியெடுத்தவன் கஎெல்லாம் தண்டல்காரர் ஆவதுபோல (அ)டடிக்க ஆரமபிக்குமுன் கல்வியில் கம்பன எனறநினைப்பு) "அடுத்த தமிழக முதலமைச்சர் சாட்சாத் கருணாநிதியேதான்" என ஆதாரபூர்மாக நிறுவி எழுதினுர். 'சோதடமலர்'' வெளியிடும் மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களே சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டிஎன்பதைப்போல தாஙகள் தமிழ்கூறுமநல்லுலகிற்கு ஆற்றிவரும்சோதிடப்பணியை உளமாரப்போற்றுகிறேம். எம். ஜி. ஆருக்கு ஒரு நாஞ்சில் மனோகரன் வாய்த்தது போல தங்கள் மலருக்கு எழுதும் ஆசிரியர்களைப்பற்றி மிகவும் விழிப்பாக இருங்கள். சோதிடம் ஒருதெய்வீகம். அதை மாசுபடுத்தவேண்டாம்.

இன்று இந்தியாவிலே பாலஜோதிடம் என்ற சோதட இதழை 'இதயம்' ஆசிரியர் மணியன் அவர்கள் நடாத்திவருகின்றுர் "இச்சஞ்சிகையில் எம். ஜி. ஆர் அவர்களை ராகு திருமபவும் வெற்றித் திருமகனுக ஆக்கிவைப்பார்" என எழுதப்பட்டிருந்ததைக் கண்ட வாசகர்கள் மணியன் எம். ஜி. ஆருக்கு காக்கா பிடிக்கின்றவரானபடியினுல அப்படி எழுதினுர் என்கிறுர்கள். கலைஞர் கருணாநிதிகூட இதைப்பற்றி விமர்சிக்கும்போது "மணியன் இப்படி வெளியிட்டதைக் கண்டென்றுலும் மக்கள் எம். ஜி. ஆரை ஆதரிக்கமாட்டார்கள்'' என்றுர்.

நடக்கு மென்பார் நடக்காது
நடக்கா தென்பார் நடந்துவிடும்.

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க வெளியீடு "சோதிடபரிபாலினி'' ஆசிரியர் இ. வெங்கடேசஐயர் அவர்களினுல் மாதமொரு இம் மலர் மலர்கின்றது. சித்தரார்த்தி மாசி இதழ் 13-2-1980-ல் "1980-ம் ஆண்டின் உலகப்போக்கு எப்படி இருக்கும்'' என்றகட்டுரையில் ஆ. சிவராசா B. A. B. PHI - வேலணைகிழக்கு சோதிடர் வாக்கிய பஞ்சாங்க அடிப்படையில் பின்வருமாறு எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

17·51980-ல் தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற்றுல் எம். ஜி. ஆர் அவர்கள் திரும்பவும் தனது அந்தஸ்த்தைக் காப்பாற்றிக்கொள்ளமுடியும், ஏனெனில் துலாராசிக்காரரான ராகு இவருக்குச் சாதகமான சூழ்நிலையில் அமைத்துள்ளார், ராகுதான் எல்லாக் கிரகங்களிலிம் மிகவும் வலிமை வாய்ந்தவர், இவரே அரசியல் கிரகம். 17- 5-1980 தொடக்கம் ஒன்றரை வருடங்களுக்கு துலர்ராகிக்காரருக்கு ராகு 10லும் கேது 4லும் இருப்பார். கேது நாலாமிடமாகித் தீயபலனைச் செய்தாலும் பெண் கிரகமான ராகுவினுல் இவர் உன்னத நிலைக்கு வருவார்.

வாக்கியக்கணிப்பு வரிக்கு வரி உண்மை என்பதை எம். ஜி. ஆரின் வெற்றி காட்டிவிட்டது. ஆ. சிவராசாவின மேற்படி கூற்றை ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகைகள் பாராட்டின. (சோதிடபரிபாலினி 13- 2 80 ஆண்டிதழ் தேவையானேர், ஆசிரியர். இ. வெங்கடேசஐயர், சோதிடபரிபாலன மடம், கொக்குவில் என்றமுகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.)

திட்டிய மரத்திலே கூர்பார்ப்பதுபோல திருக்கணிதபஞ்சாங்கத்தை பயின்று; ஏதோ ஒரு புதுமைசெய்ததைப்போன்று வியாபார நோக்கில் உண்மைக்கு மாறுன தகவல்களை இனியாவது திருக்கணித அடிப்படையில்பின்பற்றி எழுதும் சோதிடர்கள்பற்றி மக்கள் மிகமிக விழிப்பாக இருக்கவேண்டும்.

எம். ஜி. ஆரா? கருணாநிதியா? தமிழ்நாட்டின் பிரதமர்? என நடாத்தப்பட்ட போட்டியில் 388-8 பருத்தித்துறை வீதி,

நல்லூர். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திரு. க. பிரேமகுமார் எழுதிய கடிதமொன்றை அப்படியே இங்கு தருகின்றேன். வாக்கிய பஞ்சாங்க அபிமானி இவர்.

388/8, பருத்தித்துறை வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்
26-05-1980

ஆ. சிவராசா பி. ஏ., பி; எல்
ஆசிரியர்
வேலணை கிழக்கு
வேலணை.

தங்களால் வெளியிடப் பட்டுள்ள ரர்கு கேது மாற்றத்தைப் பற்றிய புத்தகத்தின் கடைசிப்பக்கத்தில் எம். ஜி. ஆரா? கருணாநிதியா? தமிழ்நாட்டின் அடுத்த பிரதமர் என்ற போட்டியில் நான் என்னுடைய தங்களின் முன்பு சமர்ப்பிக்கின்றேன்.

''தமிழ்நாட்டின் அடுத்த பிரதம மந்திரி எம். ஜி. ஆர். என்பதை அவரது ஜாதகத் தின்படி உறுதிப் படுத்தலாம். தற்போது எம் ஜி ஆருக்கு நடப்பது கேது மகாதெசை கேது வியாழனின் நட்சத்திரக்தில் நிற்ப தால், வியாழனின் பலன்களையே செய்யும். வியாழன் லாபஸ்தானத்திற்கு அதிபதியாக வருவது எம் ஜி ஆரின் வெற்றிக்கு உதவி புரியும். மேலும் வியாழன் 3-ம் இடமாகிய வீரியஸ்தானமாம், பராக்கிரமம் என்ற 8-ம் இடத்தில் நிற்பது அதி உத்தமமாகும். வியாழன் மேடத்தில் நின்று மேடத்தின் அதிபதியான செவ்வாய் உச்சம் பெறுவது பிரச்சனைகளுக்குமத்தியில் எம் ஜி ஆர்வெற்றி பெற்றுப் பிரதமராக வருவார். மேலும் கேது வெள்ளியின் பார்வையை 7-ம்பார்வை யாக 11-ம் இடத்திலிருந்து பார்ப்பதால் கேது வெள்ளியின் தன்மைகளையும் பெற்று பலன் செய்யும். வெள்ளி 9-ம் அதிபதியாக வருவது மிகவும் நன்று. வெள்ளியின் பார் வையைக் கேது பெறுவதால் கேது 9-ம் இடத்தின் பூர்வபுண்ணியபலன்களையும் செய்யும். இது எம். ஜி ஆரின் வெற்றிக்கு மிகவும் சிறந்தது ஆகும். கேது வியாழ னின் பலன்களைச் செய்வதால் 2, 11, 3-ம் வீடுகளின் பலன்களைச் செய்வதால் 9-ம், 11-ம் வீட்டுப் பலன்களையும் செய்யும். இவ் வீடுகள் ஒருவரின் ஜாதகத்தில் வெற்றி யைக் குறிக்கும் வீடுகளாகும். ஆகவே எம். ஜி. ஆர். தேர்தலில் வெற்றிபெற்று தமிழ் நாட்டின் அடுத்த பிரதமராக வருவார்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
க. பிரேமகுமார்

க. பிரேமகுமார்போன்று வாக்கிய பஞ் சாங்க முடிவுகளை உலகின் போக்கிற்குப் பிரயோகித்துத் தீர்ப்பினைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் இன்றி இலைமறைகாய்போல இருக்கின்றார்கள். வாக்கிய பஞ்சாங்கத்திற் கெதிராக விஷமப் பிரசாரம் செய்வோர்கு கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டபடி, வா மூழ் நீரிலேதான் மீன்கள் இறக்கும் நிலை யை அடைவார்கள். போற்றுவார் போற் றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட் டும். 'வாக்கிய பஞ்சாங்கம்' தன் கடன் பணிசெய்து வரும்.

---

மனிதனது மனமானது கடுகுப்பொட்டலம் போன்றது. அந்தப் பொட் டலம் கிழிந்து கடுகு நாலாபக்கங்களிலும் ஓடிவிட்டால் எப்படி அதை ஒன்று சேர்ப்பது கஷ்டமானதோ? அதுபோலவே மனம் பலவழிகளிற் சென்று உல விஷயங்களில் ஈடுபட்டிருக்கும்போது அதை ஒன் றாய்க் குவித்து ஒருநிலைப்படுத்துவது சுலபமான காரியமன்று. ஓர் இளைஞனுடைய மனம் பலவழிகளில் செல்லாமலிருப்பதால் ஏதாவது ஒன்றின்மீது சுலபமாய் நிறுத்தலாம். ஆனால் ஓர் கிழவனுடைய மன மானது உலகவிஷயங்களிலேயே முழுவதும் அமர்ந்திருப்பதானல் அவை களினின்றும் நீக்கி, அதைக் கடவுளின்மீது செலுத்துவது மிகக் கஷ்டம்.

— குருதேவர் வாக்கியம்

# ரௌத்திரிவருடம் ஆனிமாதம்

## இலங்கைக்குப் பலன்

இம்மாதம் காற்று அதிகரிக்கும். முன்னிருந்ததிலும் சூடு தணியும், சுழி மழை பெய்யும். பழவகைகள் மலியும். மீன் கருவாடு வைக்கோல் விறகு கள் மதுபானம் என்பன சமவிலையுடையதாயிருக்கும். எரிபொருள் தட்டுப்பாடு நிலவும். பொருள்கள் மேலும் விலையேறும். வெளிநாட்டின் தொடர்பால் இலங்கைக்கு பொருள்வரவு அதிகரிக்கும். விசேடதூதுவர்கள் இலங்கைக்கு வந்துசேருவார். மலேசியா முதலியவற்றோடு மேலும் நல்லுறவு ஏற்படும். அரசியல் நெருக்கடி ஏற்படும். தொழிலாளர் இடையே கலகம் கைகலப்பு, கந்தோர்களில் வாக்குவாதம், ஏற்படும். அரசாங்க எழுதுவினைஞர் ஆசிரியர் பணக்கஷ்டத்தால் வாடுவர். வியாபாரிகள் தரகர் சட்டத்தரணிகள் நன்மை பெறுவர். கால்நடைகள் கஷ்டமுறும்; இயந்திரம் வைத்திருப்போர் நட்டமுறுவர்.

விவசாயிகள் கிருமிநாசினி அதிகம் உபயோகிக்கவேண்டியதில்லை. பயிர்களை நாசம் செய்யும் பூச்சி புழுக்கள் மிகக் குறையும்.

**கோசர பலன் :**

## பன்னிரு இராசிகளும் அவற்றின் பலன்களும்




இடையிடையே அற்ப நோய் எதிர்பாராத சில சம்பவங்களினால் மனக்கவலை, இலட்சுமீகரம் காய்ச்சல் உஷ்ணரோகம், மன உற்சாகம் உல்லாசமான பொழுதுபோக்கு, இடைவிடாத முயற்சி எதிர்காலத்தில் யாது நிகழுமோ என்ற கவலை, இனசனக் கொண்டாட்டம், தூரதேச உறவினரொருவரால் லாபம். மாதப்பிற்பகுதியில் உடல்நிலை திருந்துதல், தனது பெலத்தில் சிறிது குறைதல், வீண்பெயர், வீண்செலவு என்பன உண்டாம். இவர்களுக்கு 26, 27, 30-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் விவாகம் வேளாண்மை, உத்தியோகம் தேடுதல் பிரயாணம் முதலியன சம்பந்தமான அலுவல்களில் ஈடுபட விசேட நன்மையுண்டாகும். இவர்களுக்கு 28-ம் தேதி நற்பலனுக்குரியதன்று.




எதிர்பார்த்த விடயங்கள் எதிர்பார்த்தபடியே நிறைவேறுதல், தொழில்முன்னேற்றம், தனதுபெலத்தில் சிறிது குறைதல், காரணமின்றி வீண்பயம் பொருள் வரவு எடுத்தகாரியங்களில் வெற்றி, அதிகாரம், சந்தோஷம், காரணமின்றி வீண்கலகம், நண்பர்களிடையே விளங்கா விளக்கத்தினால் வீண்விவாதம், அதனால் வீண்விரோதம், இடையிடையே காய்ச்சல், அலைக்கழிவு, மாத இறுதியில் உற்சாகம், சுறுசுறுப்பு மேன்மை உண்டாம். இவர்களுக்கு 25-ம் 26-ம் 29-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் இவர்கள் பிரயாணம், வழக்கு, கொடுக்கல் வாங்கல்,

மேலுத்தியோகத்தர்களைச் சந்தித்தல் என்பனவற்றை செய்ய விசேட பலனுண்டாம். இவர்களுக்கு 27-ம் தேதி விசேட பலனுக்குரியதன்று. அன்று பொதுவாக அரசாங்க உத்தியோகஸ்தர்களைச் சந்திப்பதை தவிர்க்கவும்.



## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4-ம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் கால்கள்**

எதிர்பார்த்த சில விஷயங்கள் நிறைவேருமையினுற் கவலை, நண்பர்களிடையே வாக்குவாதம் அதனுல்மனக்கசப்பு, வீண்செலவு துன்பம் சுற்றத்தவரின் உதவி, பெண்ணுனல்புருஷனுக்கும் ஆணுனல் மனைவிக்கும் விசேடபலன், விவாகமாகாதவர்களுக்கும் காதல் விவாகம் என்பவற்றில் முன்னேற்றம் பணவரவு, வெற்றி எதிர்பாராத சில சம்பவங்கள் நிறைவேறுதல் தெய்வானுகூலம் பெரியோர் சகாயம் என்பன உண்டாம். இவர்களுக்கு 24-ம் 25-ம் 28-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் உத்தியோகம் தேடுதல் வீடு நண்பர்களைச் சந்தித்தல், காதல் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 26-ம் தேதி விசேடபலனுக்குரியதன்று. அன்று தூரதேசப் பிரயாணத்தைத் தவிர்க்கவும்.



## கர்க்கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

இடையிடையே சுகவீனம் பணவரவு, தொழிலில் விசேட முன்னேற்றம், உற்சாகம், வெற்றி, தான்செய்யாத சில விடயங்களுக்காக வீண்பழிகேட்டல், எதிர்பார்த்த சில கருமங்கள் தவறிப்போகுதல், அதனுல் மனத்தளர்வு, உல்லாசமான பொழுதுபோக்கு, தெய்வவழிபாடு, பெரியோர்சகாயம், மாதமுடிவில் திரவியலாபம், பகைவர்களால் நேரவிருந்த துன்பம் நீங்குதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 23-ம் 24-ம் 27ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்தல், பிரயாணம், விவாகம், கொடுக்கல் வாங்கல் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 25ம் நாள் விசேடபலனுக்குரியதன்று. அன்று புதிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டாம்.



## சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்**

எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தவண்ணமே நடைபெருதிருத்தல், இடையிடையே நோய், காய்ச்சல், எடுத்த சில விடயங்களில் பொருள் நட்டம், தொழிலில் உற்சாகம், நண்பர்களாற்சகாயம், தெய்வானுகூலம், மாதக்கடைசியில் பணவரவு, இடமாற்றம், மேலுத்தியோகத்தர்களால் நன்மை, பெரியோர்சகாயம், இலட்சுமீகரம், சுகம் என்பனஉண்டாம். இவர்களுக்கு 22ம் 23ம் 26ம் தேதிகள் விசேடபலனுக்குரியன. இக்காலங்களில் இவர்கள் தொழில்தேடுதல், பரீட்சைகளுக்குத் தோற்றுதல், நேர்முகப்பரீட்சை என்பனவற்றைச் செய்தால் விசேடபலனுண்டாகும். இவர்களுக்கு 24ம் நாள் விசேடபலனுக்குரியதன்று. அன்று பொதுவாக வாகனங்கள் இயந்திரங்கள் சம்பந்தமானவற்றை விலக்குதல் நன்று.

நன்மை விருத்தி இடமாற்றம், அதனுல் பணச்செலவு சந்தோஷம் வீட்டில் சுபதினங்கள் கொண்டா டுதல் சுற்றத்தவர் நன்மை, நண் பர்களிடையே விளங்கா வி த த் தால் வீண்சச்சரவு பொருளழிவு லாபம் தொழிலில்உற்சாகம் உட லில் இருந்த நோய் நீங்கிப்போ தல் பெரியோர் சகாயம் தெய்வ வழிபாட்டினுல் நேரவிருந்த ஆப த்துகள் நீங்குதல் மாதப்பிற்பகு



## கன்னி

**உத்தரம் 2, 3, 4-ம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2-ம் கால்கள்**

தியில் விவாகமாகாதவர்களால் காதல் விவகாரங்களில் நன்மை. குடும்பத்தவர்களுக்கு உல்லாசப் பொழுபோக்கு என்பன உண்டாம். இவர்களுக்கு 21-ம் 22-ம் 25-ம்தேதி கள் விசேடபலனுக்குரியன. இக்காலங்களில் விவாகம், வழக்கு விவசாயம், பிரயாணம் என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். 23-ம் தேதியைப் பொதுவாக முக்கிய விடயங்களுக்கு விலக்கவும்.



## துலாம்

**சித்திரை 3, 4-ம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் கால்கள்**

எடுத்த காரியங்களில் வெற்றி தொழிலில் உற்சாகம், அதனுல் பணவரவு, இடையிடையே கை கால்களில் பிடிப்பு உடல் நலக் குறைவு, பிரயாணத்தில் அதிக செலவு, உல்லாசமானபொழுது போக்கு விருந்துகளிற்பங்கெடுத் தல் பிரயாணம் எதிர்பாரத துன்பமான சிலசெய்திகள் இட மாற்றம், பெரியோர் சகாயம் தெய்வானுகூலம் மாதஇறுதியில் புதிய சில வருமானங்கள் உண்டு. இவர்களுக்கு 20. 21-ம் 24-ம் நாட்கள் விசேடபல னுக்குரியவை. இக்காலங்களில் இவர்கள் பிரயாணம், விவாகம். மருந்துசெய்தல் ஆகி வற்றில் ஈடுபட விசேடபலனுண்டாகும். இவர்களுக்கு 22-ம் தேதி பொதுவாகச் சுப பலனுக்குரியதன்று. அன்று அரசாங்கம் அதிகாரிகளைச் சந்திப்பதைத் தவிர்க்குக.


தானிருந்த இடத்திருந்து நிலை மாறுதல் பொருள் வரவு உட லில் உள்ள சிறுநோய்கள் நீங்கி சந்தோஷம், உற்சாகம். மனக் கிளர்ச்சி எதிர்பாராத சிலசம்ப வங்கள் நிகழுதல் அதனுல் மனக் கஷ்டம், தொழிலில் விசேடலா பம், இன்பமான பொழுது போ க்கு மேலும் எதிர்பாராத இட ங்களிலிருந்து பணம் வருதல் லாபம் சுகம் தான்செய்யாத சில விடயங்களுக்காக வீண்பழி



## விருச்சிகம்

**விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை**

கேட்டல் என்பன உண்டாம் இவர்களுக்கு19-ம் 20-ம் 23-ம் தேதிகள் விசேடபலனுக்குரியவை. இக்காலங்களில் இவர்கள் தொழில்தேடுதல் விவாகப் பேச்சுகள் பிறதேசபிரயாணம் அரசாங்க அதிகாரிகளை பேட்டிகாணுதல் என் பனசெய்ய விசேடபலனுண்டாகும். 21-ம் தேதியை பிரதானவிடயங்களுக்கு விலக்குக.



## தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்**

எதிர்பாராத சிலவிடயங்களால் மனத்துன்பம். உடலில் சூடு சம் பந்தமான சில நோய்கள் உண் டாதல் உடல் எரிவு பணவரவு மாத இறுதியில் உடலிலுள்ள நோய்கள் அற்றுப்போதல் மாண வர்களானுல் கல்வியில் விசேட தேர்ச்சி பெரியோர்கள் அறிவு வுரைகளினுல் சிலபிரச்சனைகளை கஷ்டமின்றி தீர்த்தல், புத்திவி

ருத்தி பொருள்வரவு தருமச்செலவு தெய்வவழிபாடு அபகீர்த்தி அதனுல்பொருட்செலவு காரியங்கள் தாமதப்பட்டு நிறைவேறுதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 18-ம் 19-ம் 22-ம் தேதிகள் விசேட பலனுக்குரியன. இக்காலங்களில் தொழில் தேடுதல் தூரப்பிரயாணம், அந்நியர் உதவி, விவாகப்பேச்சுகள் பரீட்சை என்பன சம்பந்தமானவிடயங்களைச் செய்ய விசேட பலனுண்டாகும். இவர்களுக்கு 20-ம் தேதி நற்பலனுக்குரியதன்று. அன்று இயந்திரங்கள் பிரயாணம் தொழில்தேடுதல் என்பன சம்பந்தமான விடயங்களை ஒத்திவைத்தல் நன்று.



## மகரம்

உத்தராடம் 2, 3, 4-ம் கால்கள்,
திருவோணம்,
அவிட்டம் 1, 2-ம் கால்கள்

எதிர்காலத்தில் யாது நிகழுமோ என்றபயம், தொழில்கஷ்டத்தோடு முன்னேறுதல், சில காரியங்கள் நட்டமாகுதல். வாக்குக்கலகம் அதனுல் மனவிரோதம் அதிகாரம், சம்பத்து பெண்களால் கஷ்டம் இடையிடையே உடல்நலக்குறைவு, மாத நடுப்பகுதியில் இவை நீங்கல் விருந்தினர்வருதல், எதிர்பாராத சிலசம்பவங்கள்நிகழுதல், அதனுல் மனக்கஷ்டம் மாத இறுதியில் மனஉற்சாகம் தொழிலில் முன்னேற்றம் பெரியோர் சகாயம் பணவரவு, நண்பர்களாற் சில நன்மைகள் என்பன உண்டாம். இவர்களுக்கு 17-ம் 18-ம் 21-ம் தேதிகள் விசேட பலனுக்குரியவை. இக்காலங்களில் இவர்கள் விவாகம், தொழில் பிரயாணம் விவசாயம் என்பன சம்பந்தமானவற்றைச் செய்க. 19-ம்தேதியை பிரதான அலுவல்களுக்கு விலக்குக.



## கும்பம்

அவிட்டம் 3, 4-ம் கால்கள்,
சதயம்,
பூரட்டாதி 1, 2, 3-கால்கள்

அனுகூலம், எதிர்பாராத சில கோளாறுகள் ஏற்படுதல் அதனுல் மனத்துன்பம் பொருள்வரவு தொழில் முன்னேற்றம் துன்பம் தன் முன்னேற்றத்தில் அந்நியர் தலையீடு நிலைப்பிரிவு மாத இறுதியில் உடலில் ஏற்பட்ட சிலநோய்கள் நீங்குதல் பெரியோர் சகாயம் தெய்வானுகூலத்தால் ஏற்பட்ட சில ஆபத்துகள் நீங்குதல், இயந்திரம் ஆயுதம் என்பவற்றுல் பயம் மாத இறுதியில் தொழிலில் விசேடமுன்னேற்றம் பொருள்வரவு உற்சாகம் என்பன உண்டாகும், இவர்களுக்கு 16-ம் 17-ம் 19-ம் தேதிகள் விசேட பலனுகுரியவை. இந்நாள்களில் விவாகம் தொழில் கொடுக்கல் வாங்கல் கல்வி சம்மந்தமான விடயங்களைச் செய்ய விசேடபலனுண்டாகும். இவர்கள் 18-ம் தேதியை நற்கருமங்களுக்கு விலக்குக



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால்,
உத்தரட்டாதி,
ரேவதி

இடையிடையே உடல் நலக்குறைவு அதனுல் செலவு கஷ்டம் வாக்குவாதத்தினுல் குடும்பக்கலகம். பெண்களின் அதிகப்பேச்சால் சில கஷ்டங்கள், பொருள்வரவு தொழிலில் விசேடமுன்னேற்றம் நண்பர்களாற் சகாயம் தெய்வானுகூலம் மனக்கிளர்ச்சி உற்சாகம் மேலதிகாரிகளால் நன்மை பிரதானமானஒருவரின் சந்திப்பு போகம் மாணவர்களாயின் புத்திவிருத்தி கல்வி முன்னேற்றம் என்பன உண்டாம். இவர்களுக்கு 15-ம் 16-ம் 18-ம் தேதிகள் விசேடபலனுக்குரியன. இக்காலங்களில் விவாகம் வழக்கு பிரயாணம் தொழில் சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேடபலனுண்டாகும். இவர்களுக்கு பொதுவாக 17-ம்தேதி நற்பலனுக்குரியதன்று.

# நிலவும் நீறும்

**வ. குகசர்மா**

சிவபெருமான் வீபூதியை அணிந்துள்ளார். இந்தக் கோலத்தை சமய இலக்கியங்கள் பலபட வர்ணிக்கின்றன. அவற்றுள் நிலவோடு உவமை கூறி வர்ணிக்கப்படும் இடங்கள் பலவுண்டு. நளவெண்பாவிலே புகழேந்திப்புலவர் சிவபெருமான் வணக்கத்தில் இதைத்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். மயிலையொத்த உமையம்மையாரை பாகத்திலே கங்கைநதி சூடியசடையில் உள்ள சந்திரனின் நிலவாகிய ஒளியை தம்உடல் எங்கும் வழியுமாறு தெளித்தாற் போல வெண்ணீற்றை அணிந்தவர், பாம்புகளை மிகுதியாக அணிந்தவருமாகிய சிவபெருமான் நமக்குக் காப்பு என்று கூறுகிறார்.

''கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமேல் உறையும்—நிலாவை
வழிய வார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு''

''பவள்மால் வரையில் நிலவெறிப்பது போல் பரந்த நீற்றழகு'' என்பது திருவாதவூரடிகள் புராணம்.

நிலவுவெண்மை நிறமானது. வெண்மை நிறம் சுத்தத்திற்கு அடையாளமானது. நிர்மலமானது வெள்ளிமலை, திருக்கைலாசமலை. அந்தமலைக்கு உவமை கூறப்புகுந்த கந்தபுராண ஆசிரியர் ''கண்ணுதல் நீறுசேர்தருகோலமும் நித்தனைத் தேறுமன்பர்தம் சிந்தையும் போன்றதே'' என்று கூறுவது இங்கு கவனிக்கத்தக்கது. நீறுசேர் கோலம் நிர்மலமானது தூய்மையானது அது போல அன்பர் உள்ளமும் நிர்மலமானது. நிலாவெளியும் நிர்மலமானது.

இன்பத்தைக் தருவது நிலவும் ''மலர்ந்திடு கடவுட் திங்கள் வானிலாக் கற்றையெங்கும் கலந்தன உலகில் யாரும் களித்தனர்'' என்பது கந்தபுராணம். இன்சொலால் மகிழும் உலகினர்க்கு சந்திரன் வரவால் மகிழ்ந்து பொங்கும் கடல் உவமை கூறப்பட்டுள்ளது. நீறு அணிந்தார் தம் அகத்திருளும் நோயும் நீக்கி இன்பம் அளிக்கவல்லது.

சந்திரன் குளிர்ச்சியுடையது. தம் அருளின் திறம் காட்டவே அரசர் சந்திரனை நிகர்த்த வெண்குடை தாங்கினர். இறைவனும் அருளின் சிறப்பை உலகிற்கு அறிவுறுத்தவே சந்திரனையும், கங்கையையும் சடையிலே தரித்தார் என்பர். நீறும் குளிர்ச்சியைத்தர வல்லது. பிள்ளையார் தென்னவன் தனது வலப்பால் வெப்பு நோயை மாற்றியதைக்கூற வந்த சேக்கிழார்,

''திருவளர் நீறு கொண்டு திருக்கையால்
தடவத் தென்னன்
பொருவரு வெப்பு நீங்கிய பொய்கையிற்
குளிர்ந்தது''

என்று அழகாகக் கூறுகிறுர். வெந்துயர்ப் பிறவியையே தீர்க்கத்தக்கது நீறல்லவா?

நிலவு அண்டமெலாம் பரந்தது வீபூதியின் பெருமையும் எல்லா அண்டங்களிலும் பரக்கும்சிறப்புடையது. ''புண்ணியமாவது நீறு'' என்பது ஞானசம்பந்தர் வாக்கு வெண்மை நிறம் புண்ணியத்திற் உவமை. திருக்கைலாசமலையைப்பற்றிப் பாடவந்த சேக்கிழார்,

எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது''

என்று கூறுவதும் நோக்கத்தக்கது.

மதுரையில் உள்ள சமணஇருளை அகற்ற ஞானசம்பந்தர் எழுந்தருளி வருகிறுர். அவருடைய திருநிலவு மணிமுத்துச்சிவிகையும், நிலவுதரு மதி போல் வளரொளி வெண்குடையும், அவருடன் வரும் திருநீற்றுத் தொண்டர் குழாமும், இவையெல்லாம் வெண்மை ஒளிபரப்பி வருகின்றன. இந்த வெண்மை ஒளி பூவுலகத்தில் மாத்திரம் பரவவில்லை வானுலகத்திலும் பரவியது. அண்டமெலாம் பரந்த நிலவொளிபோல. இதனுலே அமணரின் பர்வம் இருட்சேனை அஞ்சியோடியது. இவ்வாறு புண்ணியத்தின் படையெழுச்சியைக் காட்டுகிருர் சேக்கிழார்.

'பண்ணியவஞ் சனைத்தவத்தாற் பஞ்சவனுட் [டிடைப்பரந்த
எண்ணிலமணெனும்பாவ விருஞ்சேனை. [யிரிந்தோட
பண்ணுலக மேயன்றி வானுலகுஞ் செய்த [பெரும்
புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் [பொலிவெய்த''

புண்ணியம் தாம் உயிர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கவல்லது. ஞானந்தான் அறியாமை இருள் நீக்கி ஒளிபரப்பவல்லது. இன்பத்தை அளிக்கவல்லது. சிவசின்னமாகிய வீபூதி ஞானத்தை அளிக்கவல்லது. ஞானவடிவமானது. நோயை நீக்கும் மந்திரமாவது. வீபூதியின் வெண்மையும், அதன் தன்மையும் ஒரளவிற்கு விளக்கி நிற்பது வெண்ணிலா. அடியார்கள் மனதில் வெண்ணீற்றின் நினைவை ஏற்படுத்துவது.

''தோற்று மன்னுயிர் கட்கெலாந்
தூய்மையே
சாற்று மின்பமும் தன்மையுந் தந்து போய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா''

## நித்தியஷஷ்டிவிரதம்

ஒவ்வொரு மாதமும் இரு பக்ஷங்களிலும் வரும் ஷஷ்டியில் உபவாசமிருந்து சுப்பிரமணியரைப் பூசிப்போர் சகல பாக்கியங்களையும் பெறுவர். ஸ்கந்தஷஷ்டி ஆண்டிற் கொருமுறை வரும் உயர்ந்த ஷஷ்டி நாளாகும்.

## சதுர்த்தி

சதுர்த்திவிரதமிருப்போர் பிரதி மாதத்திலும் வரும் சதுர்த்திகளில் விநாயகரைப் பூசித்துக் கோரிய பலனைப் பெறலாம்.

## கார்த்திகை விரதம்

சுப்பிரமணியனுக்கு கிருத்திகாதேவிகள் (நக்ஷத்திர ரூபமாக இருப்பவர்) சரவணப் பொய்கையில் பாலளித்தனர். அன்று உபவாசமிருந்து குகனைப் பூசிப்போர் இஷ்டசித்திகளைப் பெறுவர, இவைகள் காம்மிய விரதங்கள்.



# தில்லையும்திருமஞ்சனமும்

வேதபுராண இதிகாசங்களில் புகழப்படும் தலம் தில்லை. இதற்கு ஐந்து பெயர்கள் வழங்குகின்றன. 1. சிதம்பரம். 2. தில்லைவனம். 3. வியாக்ரபுரம். 4. ஹேமசபாநாதபுரம். 5. புண்டரிகபுரம். ஞானவெளியில் நடராஜர் ஆனந்ததாண்டவம் ஆடுவதால் சிதம்பரம் எனப்பெயர். தில்லை செடிகள் நிறைந்தகாடாக இருந்தமையால் தில்லைவனம் எனப் பெயர். மத்யந்தின முனிவர் தவம் செய்து பெற்ற புலிக்கால், புலிக்கைபெயரால் ஏற்பட்டது. வியாக்ரபுரம். பொற்சபையின் கண் நடனமாடுவதால் ஹேமசபாநாதபுரம் எனப் பெயர். இவ் உலகாகிய தேவபுருஷனுக்கு தாமரைக்கு நிகராக உள்ள இதயமத்தியில் அமைந்திருப்பதால் புண்டரிகபுரம் எனப்பெயர் இத்தகைய மகிமைவாய்ந்தது தில்லை. அதில் நடனமிடும் நடராஜப்பெருமானின் உற்சவகாலம் ஆனிமாத கார்த்திகை தொடங்கி உத்தரம் இறுதியாக பத்துநாட்கள். அதனுடைய வைபவங்களை காண்போம். கொடியேற்றத்திற்கு முன் தினம் வேதம்கூறி புனிதமண் எடுத்து பாலிகை அமைத்தல். காப்புகட்டுதல், த்வஜபட பூஜை த்வஜபடம் வீதி வலம் ஆகியவை நடக்கும். அன்று காலை பஞ்சமூர்த்திகளின் முன்னிலையில் அஸ்தரராஜ பூஜையும் தேவதா வாகனமும் ஸ்வர்ண த்வஜஆரோகணமும், ஆசீர்வாதமும், பஞ்சமூர்த்திகள் தங்கமஞ்சங்களில் உள், வெளிப்பிரகார வலம் வருதலும் நடைபெறும். இரவு 9 மணிக்கு பஞ்சமூர்த்திகள் தேர்ஓடும் வீதிகளில் அஷ்டதிக்குகளிலும் தேவதைகளை நவதின மஹோத்ஸவ சேவைக்காகவும் லோகபாதுகாப்புக்காகவும் மந்தரப் பூர்வமாக ஆவாஹனம் செய்வது.

| திக்குதேவதைகள் | வாகனம் |
|---|---|
| 1. பிர்மா, சரஸ்வதி | அன்னப்பறவை |
| 2. இந்திரன் இந்திராணி | வெள்ளையானை |
| 3. அக்கினி, சுவாகாதேவி | ஆட்டுக்கடா |
| 4. எமன், சியாமளாதேவி | எருமைக்கடா |
| 5. நிருரிதி, தீர்க்காதேவி | சிம்மம் |
| 6. வருணன், காளிகாதேவி | முதலை |
| 7. வாயு, அஞ்சனுதேவி | மான் |
| 8. குபேரன் (சோமன்) சித்ரலேகாதேவி | குதிரை |
| 9. ஈசானன், பார்வதிதேவி | காளை |

பஞ்சமூர்த்தி வீதிவலம் வந்தபின் கடஸ்தாபனமும் யாகபூஜையும் தொடக்கம். மறுநாள் முதல்பத்து நாட்களிலும் காலை, மாலை இரு வேளைகளிலும் வேள்விசெய்துசுவாமி புறப்பட்டு யாகசாலை முன் மங்கள நீராஞ்சனம் செய்துவீதிவலம் வரும்.

**கொடிஏற்றத்தின் தத்துவம்:-**

ஊழிக்காலத்தில் தர்மதேவதை அழிவிற்கஞ்சி காளை உருக்கொண்டு சிவபெருமானை சரணடைய அவர் அதனை ஊர்தியாகவும் திருக்கொடியாகவும் கொண்டார். அத்திருக் கொடியாம் அறக்கொடியை பெருந் திருவிழா தொடக்கத்தில் தேவர், முனிவர் முதல் பலர்அறியும் வண்ணம் உயர்த்திக்கட்டுவதே கொடியேற்றமாகும். தர்மத்தை நிலை நிறுத்துவதே உட்கருத்து. அதைக் காண்பவர்கள் அதை கடைபிடிப்பது மாண்புமிக்க செயலாகும். மேலும், கீழும் அகண்டாகாரமாக ஜோதிர் வடிவமாக தத்வாகாரமாக ஸ்தம்பாகாரமாக பரப்பிர்மம் தோன்றி தேவர்களுக்கு பரதத்துவத்தை விளக்கியது என்னும் கேனஉபநிஷத்தின் சாரத்தையே பரப்பிர்மஸ்வரூபி ஸ்ரீநடராஜ மூர்த்தியின் கொடிஏற்ற வைபவம் விளக்குகிறது. ஆகையாலேயே பிரதிதின ஆறுபூஜாகாலங்களிலும் தேவதைகள் வந்து மேற்படி த்வஜஸ்தம்பத்தில் உள்ள மணிகளை வானிலிருந்துஅடித்துக்கொண்டு சேவைசெய்கிரர்கள். எனசிதம்பர மாஹாத்மியம் கூறுகின்றது.

**இரண்டாம் திருவிழா:-**

வெள்ளி சந்திரபிரபை காட்சி. சந்திரமண்டல மத்யவர்த்தியாக பெருமானை உபாசிக்க உபநிடது கூறுகிறது. அத்தகைய உபாசனையை நிலைநிறுத்துதல் இவ்விழாவின் உள்நோக்கம். இவ்வாறு சந்திரமண்டல நடுவில் அமிர்ததாரை பெருக்குடனும் பகவானை தியானித்தல் ஞானப்பிராப்திக்கு ஏதுவாகும். இவ்விஷயத்தின் விரிவை பாதஞ்சலபூஜா சூத்திரத்திலும் சோமமண்டல மத்நஸ்த என்னும் ஸ்ரீ நடராஜ சகஸ்ரயாம பாஷ்யத்திலும காணலாம்.

**மூன்றும் திருவிழா:-**

தங்கசூர்யபிரபாகாட்சி. சூர்ய மண்டல நடுவில் பகவானை தியானித்து வீடுபேறு பெறுவது என்னும் கருத்தை உபநிடதங்கள் கூறுகின்றதை காண்பித்தலே இவ் உற்சவத்தின் சீரியகருத்தாகும். ரவிமண்டல மத்யஸ்த என்னும் நடராஜ சகஸ்ர நாமபாஷ்யத்தில் இதன் விரிவை காணலாம். இம்மூர்த்தியை வழிபட்டால் கண்ரோக நிவர்த்தியும் கண் ஒளி பிரகாசமும் ஏற்படும். இதன் விபரம் அக்ஷிஉபநிடத்திலும் சூர்ய உபநிடத்திலும் விரிவாக கூறப்பட்டுள்ளது. சிவானந்தநாயகி அம்பாள் அன்னவாகனத்தில் வீதிவலம் பிர்ம வித்யா ஸ்வரூபிணியான அம்பிகை பிர்மவித்யா போதகமான ஹம்ஸ மந்திரதத்வமான ஹம்ஸவாகனத்தில் வலம் வருவது. பிர்மதத்துவ போதகமாகும். வள்ளி தேவசேனையுடன் சுப்ரமண்யர் மயில்வாகனத்திலே வலம் வருதல். சூரனைக் கொன்று அவனையே வேலும், மயிலுமாக்கி அதனையே தனதுவாகனமாக்கிக் கொண்டார். துஷ்டநிக்ரகமும் அனுக்கிரகரூபமாக வெளிப்படுத்தப்படுகிறது. இவ்விஷயத்தின் விரிவை கந்தபுராணத்தில் காண்க. விநயகர் மூஞ்சுரு வாகனத்தில் வலம் வருதல். மூக்ஷிகாஅசுரனை நிக்ரஹித்து தனது வாகனமாக்கி அருள் பாலித்தார் என்பது விநயகபுராண வரலாறு. சண்டிகேச்வரர் ரிஷப வாகனத்தில் வலம் வருதல். சிவ சேவையினுடைய பெருமையால் சிவனுடைய அருளால் சிவனுடைய ஊர்தியான ரிஷபத்தையே இவரும் ஊர்தியாக பெற்றதுபாக்கியமாகும். சிவசேவை செய்தவன் இவரை வணங்கி இவருடைய அருளால் சிவ சேவையின் பயனை அடையவேண்டும் என்பது சாஸ்திரங்களின் உட்கருத்து.

நான்காம் திருவிழா: பூத வாகனம். பூதத்தின்மேல் பகவான் வீற்றிருப்பது. பஞ்சபூதங்களுக்கும் அப்பாற்பட்டவரென்றும் பஞ்சபூதங்களின் ஆட்சியாளரென்றும் தெரிய வருகிறது. மேலும், தாருகா வன விருத்தாந்தத்தால் கிழமுனிவர்கள் அனுப்பிய அபஸ்மாரம் என்னும் பூதமாம் முயலகனை காலால் வீழ்த்தி அதன்மேல் ஆரோகணித்திருப்பது அதனை அனுக்கிரகிப்பதற்கு எடுத்துக்காட்டாகும். இதன் விரிவு சிதம்பரமஹாத்மியத்திலும் நடேசவிஜயத்திலும் பூதபதி என்னும் நடராஜ சகஸ்ரநாம பாஷ்யத்திலும் காணலாம். இம்மூர்த்தியை வழிபடுவோருக்கு பூதாதிபய நிவிர்த்தி ஏற்படும் என்பது ஆன்றோர்களின் வாக்கு.

ஐந்தாம் திருவிழா: தெருவடைச்சான் என்னும் சகோபர விமானத்தில் (சப்பரம்) வெள்ளி ரிஷப வாகன காட்சி. சத்வம், ரஜசு, தமசு, என்னும் முக்குணங்களில் சத்துவ குணத்தின் மேலோங்கிய நிலையே தெய்வத்தன்மை என்பதை விளக்குவதையே கருத்தாகக் கொண்டு முன்புறம் கோபுர வடிவமாக உயர்ந்தும் மற்றிரு குணங்கள் அடங்குவதுபோல் பின்புறம் தாழ்ந்தும் அமைந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும். மேலும் கடவுளின் ஸ்தூல வடிவமான கோபுரத்தின் நடுவில் கடவுளை உபாசிக்கும் முறையையும் விளக்குவதாகும். தர்மமானது காளை உருவத்தில் பகவானைத் தாங்கியது என்றும் மஹாவிஷ்ணு திரிபுர சம்ஹாரகாலத்தில் ரிஷபரூபங்கொண்டு பகவானைத் தாங்கினார் என்னும் புராணவரலாறு "விருஷபத்துவஜனே சப்ருகு" என்னும் நடராஜ சகஸ்ரநாம பாஷ்யத்திலும் மஹாபாரதத்திலும் லிங்க புராணத்திலும் இதன்விளக்கத்தைக் காணலாம்.

ஆறும் திருவிழா:-

வெள்ளி யானை வாகனக்காட்சி கஜாசுரனை கொன்று தோலை உடுத்திக்கொண்டார் பரமசிவன். மீண்டும் அவனுக்கு அருள் பாலிக்க அவனை உயிர்பித்துஅவனையே வாகனமாகவும் ஆக்கிக்கொண்டார். இதன் விபரம் கஜாசுர விமர்த்தன கரிசர்மாம்பரதர என்னும் நடராஜ சகஸ்கர நாம பாஷ்யத்தில் காணலாம். யானையின் நிறமாகிய கறுப்பாகிய அஞ்ஞானத்தை அடக்கி பக்தர்களுக்கு அறிவை வழங்கும் வள்ளல் என்னும் விளக்கத்தைக் தருகிறது. இந்த உற்சவம்.

ஏழாம் திருவிழா:-

தங்ககைலாச வாகனக்காட்சி பனிமலையாம் கையிலயங்கிரியை பரமசிவ பக்தனாகிய பத்துதலை இராவணன் அசைக்க அதுகண்டு சிவன் தனது காலினால் அமுக்க மூச்சுத்திணறி சிவப்பிரசாத மடைய தன்தலைகளில் ஒன்றைக் கொய்து வீணையாக ஆக்கி சாமகானம் செய்து மஹாதேவரை சந்தோஷிக்கச் செய்து அவர் அருளால் அவருக்கு வாகனமாகும் பெரும் பேறைப்பெற்றான் என்பது புராணவரலாறு. "கைலாசவாசீ" "சாமசம்ஸ்உத்" என்னும் நடராஜ சகஸ்கர நாமமும் இதனைவிளக்குகிறது. கைலாசமலையில் வீற்றிருக்கும் பகவானைக் கண்ணாரக் காண்போருக்கு சாலோக்கிய முக்திகிடைப்பது உறுதி.

எட்டாம் திருவிழா:-

தங்கரதத்தில் பிக்ஷாடனக்காட்சி பிறகு வெட்டும் குதிரை காட்சி தாருகாவனத்தில் முனிவர்கள் கட

வுளே இல்லை மந்திரங்கள் தான் பயனை அளிக்கின்றன என்று திட எண்ணமுடையவர்களாய் வேள்விகளை செய்துகொண்டு இருப்பதைக் கண்டு பகவான் கருணைகூர்ந்து அவர்களை திருத்தி அருள்பாலிக்க அழகிய பிக்ஷாடன வடிவந்தாங்கி கைகளில் கபாலம் ஏந்தி ஆசிரம வாயிலில் பிச்சைஎடுத்துச் செல்வதைக் கண்ட முனிமகளிர் தன்நிலை மறந்து மோகம் கொண்டு அவர் பின் செல்வதைக்கண்டு சினம் கொண்ட முனிவர்கள் ஆபிச்சார ஹோமம் செய்ய அதனின்றும் வெளி வந்த பாம்பு, புலி, யானை, பூதம் ஆகியவைகளை தனதாக்கிக்கொண்டு அவர்களுக்கு ஞான பிக்ஷை அளித்து அருள்புரிந்தார் என்றும் உண்மையை விளங்குவதே இம்மூர்த்தியின் தத்துவம். தன்நிலை மறந்த முனிமகளிரின் பொம்மைகளை ரதத்தின் சுற்றுப்புறங்களில் காணலாம். இம்மூர்த்தியின் வழிபாட்டால் வைராக்யலாபமும் அத்வைத ஞானபாவமும் ஏற்படாமல் இம்மூர்த்தியைக் காண்போர் தன்னால் இயன்ற பாத காணிக்கை அளித்து வைராக்யபிராப்தியை வேண்டுவது இன்றும் காணலாம். இதன் விரிவை நடேச விஜயகாவ்யத்திலும் கபாலி என்னும் நடராஜ சகஸ்கரநாம பாஷ்யத்திலும் காணலாம்.

வெட்டும் குதிரை: பிக்ஷாடனர் நான்காவது வீதி வலம் வரும் சமயம் சுமார் இரவு இரண்டுமணிக்கு வெட்டும் குதிரைமேல் பகவான் பவனி வருவார்.

வேதங்கள் குதிரைகளாகிப் பரம சிவனைத் திரிபுர சம்ஹார காலத்தில் தாங்கின என்ற கருத்தை வேதரூபஃ என்னும் ஸ்ரீ நடராஜ சகஸ்ரநாம பாஷ்யத்தில் லாம். மேலும் பஞ்சேந்திரியங்களாகிய குதிரைகளைத் தன்வயப் படுத்தி இருப்பதே யோகநிலையாகும் என்னும் கட்டோபநிஷதத்தின் தத்துவத்தையும் விளக்குகிறது. மேலும் தனது பக்தனான மணிவாசகரின் கஷ்டத்தை நீக்க நரிகளைப் பரிகளாக்கி அவைகளுக்குத் தலைவனாகி, குதிரை மேல் அமர்ந்து பாண்டியனிடம் ஒப்படைத்த வரலாற்றையும் ஞாபகப்படுத்துகின்றது. இதன் வரலாறு ஹலாஸ்யமிகாத்யத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மும்மூர்த்தியை வழிபடுவோருக்கு ஞானப்பிராப்தியும் புலன்அடக்கமும் ஏற்படும்.

ஒன்பதாம் திருவிழா:- (தேர்த்திருவிழா

பஞ்சரதங்கள் வீதிவலம், சரீரத்தை தேராக எண்ணி அதன் நடுவாக பகவானைவழிபடும் உபாசனையை வேதம் கூறுகிறது. அதை எண்பிக்கவே ரதவலக்காட்சி.கோயிலில்சுவாமியை காண முடியதவர்களுக்கு காட்சியளித்து முக்தி அளிக்கும்பொருட்டு ரதாரூடராய்நடராஜரின் வருகைஎன்பது தத்வம். மேலும் திரிபுர சம்ஹார காலத்தில், பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களை சக்கரங்களாவும் வேதங்களைக்குதிரைகளாகவும்பிர்மாவை சாரதியாகவும் ,மேருமலையை வில்லாகவும் ஆதிஷேஷனை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் வைத்து, பகவான் திரிபுரர்களை எரித்தவரலாற்றினையும் தேர் விழா தெளிவு படுத்துகிறது. ரதபதி என்னும் ருத்ர நாமம் இதனை விளக்குகிறது,

பத்தாம் திருவிழா திருமஞ்சனம்:

முதல்தினம் நான்கு ராஜவீதிகளிலும் ரதத்தில் பவனிவந்து இரவு 10 மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்திற்கு ஸ்ரீ நடராஜரையும் ஸ்ரீ சிவ

காமி அம்மையும் எழச்செய்து ஏக சமய லட்சார்ச்சனை மந்திராட்சதை வழிபாடு செய்து விடியற்காலம் 4 மணிக்கு பால், தேன், பன்னீர், சந்தனம் பஞ்சாமிருதம், இளநீர் ஆகிய திரவியங்களால் மஹாஅபிஷேகம் செய்வதுதான் திருமஞ்சனமாகும். மஞ்சனம் என்றால் ஸ்நானம் என்றுபொருள். பகவானைக்குளிர வைத்தால் நம்மை குளிரவைப்பார் என்பது தத்துவம். நமது உள்ள தாபங்கள் நீங்கி மனக்குளிர்ச்சி ஏற்படுவது திண்ணம். பிறகு காலை 10 முதல் 12 வரை வழிபாடுகளுக்குப் பிறகு சுவாமி அம்மன் புறப்பட்டு சிவுகங்கையில் தீர்த்தவாரி கொடுத்து சித்சபைக்கு நடனம் செய்து கொண்டு லட்சக்கணக்கான மக்கள் சேவிக்க செல்வதுதான் தரிசன உற்சவமாகும்.

தீர்த்தவாரியின் தத்துவம்:-

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலில் அருளலேசிறந்தது. விழா தினங்களில் ஒன்பது நாட்களிலும் வீதிகளில் எழுந்தருளி மக்களின் அறியாமையை நீக்கி உண்மை ஞானத்தை உண்டுபண்ணி ஞானவாபியான சிவன் உருவான சிவகங்கையில் அனைத்துயிர்களையும் அழுந்தச் செய்து பாவங்களை நீக்கி பரமானந்த சாகரத்தில் மூழ்கவைப்பதே உட்கருத்தாகும்.

பதினோராம் திருவிழா: புஷ்ப பல்லக்கு காட்சி:-

மணிகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பல்லக்கில் பஞ்சமூர்த்திகள் பவனிவருதல். பகவானின் லீலோத்ஸவம் என்றும் விடையாற்றி உற்சவம் என்றும் சான்றோர்கள் கூறுவர். இவ்விழாவினை காண்பவர்களுக்கு இடையறாமகிழ்ச்சி ஏற்படும் என்பது கருத்து. ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆண்டிற்கு இருமுறை ஆனி, மார்கழி தேர்விழாவில் பங்கு கொண்டு பக்தர்களுக்கு பரமானந்தம் ஏற்படச்செய்கிறார். மற்றேனைய தினங்களில் சோமஸ்கந்தர், சிவானந்தநாயகி சுப்ரமண்யர், விநாயகர் சண்டிகேச்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகளின் பவனி.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனி [னம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே''

உலகெலா உணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடு வான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங் குவாம்

❀

**தொல்லையின்றி நாம் வாழ்வதற்குத் துணையாய் தில்லையிலேயுள்ள சிவனைத் துதித்திடுவோம்.**

# ரௌத்திரி வருஷ
# ஆனிமாத மகாதேசைப் பலன்கள்

## அச்சுவினி மகம் மூலத்தில் பிறந்தவர்களின் பலன்

15 1 ஞா ஆரம்பம்

18 4 பு சனி

அலேச்சல், சோம்பல், வீண்விவாதம்.

23 9 தி சுக்

தனலாபம், சௌக்கியம், மகிழ்ச்சி.

25 11 பு செவ்

மனக்கிலேசம், வீண்சண்டை, விவாதம்.

27 13 வெ சூரி

ரோகம்; தலேயிடிநோய், அக்கினிபயம்.

2 18 பு புத

செனக்கியம், பந்துதரிசனம், பெரியோர்சன்மானம்.]

6 22 ஞா இராகு

கவலே, விரோதம், அசௌக்கியம்.

10 26 வி வியா

சந்தோஷம், நற்செய்திஅறிதல், மகிழ்ச்சி.

12 28 ச கேது

மனக்கிலேசம், சோம்பல், காரியக்கேடு.

15 31 செ சந்

பகைவர்உறவு, சந்தோஷம், தனலாபம்.

## பரணி பூரம் பூராடத்தில்பிறந்தவர்களின் பலன்

15 1 ஞா ஆரம்பம்

17 3 செ சந்தி

தனலாபம், சௌக்கியம், சந்தோஷம்.

22 8 ஞா சனி

அலேச்சல், சோம்பல், காரியக்கேடு.

27 13 வெ சுக்

பணவரவு, சௌக்கியம், மகிழ்ச்சி.

29 15 ஞா செவ்

மனக்கிலேசம், வீண்விவாதம், கஷ்டம்

1 17 செ சூரி

தலேயிடி, அக்கினிபயம், காரியத்தடை

5 21 ச புதன்

பந்துதரிசனம், நற்செய்தி யறிதல்.

9 25 பு இராகு

காரியக்கேடு, கவலே, ரோகம்.

13 29 ஞா வியா

பெரியோர் உதவி, நற்செய்தி யறிதல், சௌக்கியம்.

15 31 செ கேது

கவலே, கர்லதாமதம்; வீண்யோசனே.

## கார்த்திகை உத்தரம் உத்தராடத்தில் பிறந்தவர்களினது பலன்

15 1 ஞா ஆரம்பம்

16 2 தி கேது

சத்துருவிரோதம், ரோகபயம், காரியக்கேடு

19 5 வி சந்தி

தனலாபம், சௌக்கியம்- வெற்றி.

23 9 தி சனி

அலேச்சல், காரியக்கெடு, சோம்பல் விபத்து

28 14 ச சுக்கி

ஸ்திரீசங்கமம், தனலாபம், பந்துக்கூட்டம்.

30 16 தி செவ்

யோசனை மிகுதி, காரிய தாமதம், வீண் சண்டை.

2 18 பு சூரி

அக்கினிபயம், தலையிடிநோய், வீண்விவாதம்

7 23 தி புதன்

கல்விச் சிறப்பு, பந்துதரிசனம், மகிழ்ச்சி

12 27 வெ இராகு

காரியத்தடை, ரோகம் இலேசம்

13 31 செ வியா

சௌக்கியம், பெரியோர் சன்மானம், சந்தோஷம்

## ரோகிணி அத்தம் திருவோணத்தில் பிறந்தவர்களினது பலன்கள்

15 1 ஞா ஆரம்பம்

18 4 பு வியாழன்

பெரியோர் உதவி, நற்செய்தி அறிதல், சௌக்கியம்

20 6 வெ கேது

கவலை, காலதாமதம், வீண்யோசனை

22 8 ஞா சந்

தனலாபம், சௌக்கியம், சந்தோஷம்

26 12 வியா சனி

அலைச்சல், சோம்பல், காரியக்கேடு.

1 17 செ சுக்

பணவரவு, சௌக்கியம், மகிழ்ச்சி.

3 19 வியா சந்தி

மனக்கிலேசம், வீண் விவாதம், விபத்து.

5 21 ச சூரியன்

தலையிடி நோய், அக்கினி பயம், காரியத் தடை,

10 26 வி புதன்

பந்துதரிசனம், நற்செய்தி அறிதல் மகிழ்ச்சி

15 31 செ ராகு

காரியக்கேடு, கவலை, ரோகம்;

## மிருகசீரிடம், சித்திரை அவிட்டத்தில் பிறந்தவர்களினது பலன்கள்

15 1 ஞா ஆரம்பம்

18 4 பு ராகு

காரியத்தடை; ரோகம், இலேசம்,

22 4 பு வியான்

சௌக்கியம், பெரியோர் சன்மானம் சந்தோஷம்,

24 10 செ சனி

கவலை, காலதாமதம்; வீண்யோசனை.

26 12 வி சந்திரன்

பணவர் உறவு, சந்தோஷம், தனலாபம்,

1 17 செ சனி

அலைச்சல், சோம்பல், வீண் விவாதம்.

6 22 ஞா சுக்

தனலாபம், நற்செய்தியறிதல், சௌக்கியம்

8 24 செ செவ்

மனக்கிலேசம், வீண் சண்டை, விவாதம்,

10 26 வி சூரியன்

தலையிடி நோய், அக்கினிபயம், காரியக்கேடு

15 31 செ புதன்

சௌக்கியம், பந்துதரிசனம், பெரியோர் சன்மானம்,

## திருவாதிரை சுவாதி சதயத்தில் பிறந்தவர்களினது பலன்

15 1 ஞா ஆரம்பம்

18 4 புத புதன்

இலட்சுமீகரம், பந்துதரிசனம், சௌக்கியம்,

23 9 தி ராகு

காரியக்கேடு, ரோகம், கிலேசம்.

27 13 வெ வியாளன்

பெரியோர்உதவி, நற்செய்தி அறிதல், சௌக்கியம்.

29 15 ஞா கேது

கவலை, காலதாமதம், வீண்யோசனை.

1 17 செ சந்திரன்

தனநஷ்டம், காரியக்கேடு, அசௌக்கியம்.

6 22 ஞா சனி

அலைச்சல், சோம்பல், சண்டை.

11 27 வெ சுக்கிரன்

தனலாபம், நற்செய்தியறிதல், சௌக்கியம்

12 29 ஞா செவ்வாய்

மனக்கிலேசம், வீண்சண்டை, விவாதம்.

15 31 வச சூரியன்

தலையிடிநோய். அக்கினிபயம், காரியக்கேடு

## புனர்பூசம், விசாகம் பூரட்டாதியில் பிறந்தவர்களினது பலன்

15 1 ஞா ஆரம்பம்

16 2 தி சூரியன்

தலையிடி, அக்கினிபயம்; காரியக்கேடு.

20 6 வெ புதன்

இலட்சுமீகரம், பந்துதரிசனம், சௌக்கியம்

24 10 செ ராகு

காரியக்கேடு, ரோகம்; கிலேசம்.

28 14 ச வியா [ஷம்

பெரியோருதவி நற்செய்தியறிதல், சந்தோ

30 16 தி கேது

கவலை, காலதாமதம் வீண்யோசனை

2 18 பு சந்தி

நீரில் அபாயம், தனநஷ்டம், அசௌக்கியம்

7 23 தி சனி

அலைச்சல், வீண்வாக்குவாதம், சண்டை.

12 28 ச சுக்கிரன்

தனலாபம், நற்செய்தியறிதல், சௌக்கியம்

15 31 செ செவ்

மனக்கிலேசம், வீண்சண்டை, விவாதம்

## பூசம், அனுஷம், பூரட்டாதியில் பிறந்தவர்களினது பலன்

15 1 ஞா ஆரம்பம்

16 2 தி செவ்வாய்

மனக்கிலேசம், வீண்சண்டை, விவாதம்

18 4 பு சூரியன்

தலையிடிநோய் அக்கினிபயம், காரியக்கேடு

23 9 தி புதன்

இலட்சுமீகரம், பந்துதரிசனம், சௌக்கியம்

27 13 வெ ராகு

காரியத்தடை, ரோகம், கிலேசம்,

1 17 செ வியாழன் [தோஷம்

சௌக்கியம், பெரியோர் சன்மானம், சந்

4 20 வெ கேது

கவலை, யோசனைமிகுதி, காலதாமதம்;

6 22 ஞா சந்திரன்

நீரில்அபாயம், தனநஷ்டம், காரியதடை

11 27 வெ சனி

சோம்பல், அலைச்சல் வீண்வாக்குவாதம்.

15 31 செ சுக்கிரன்

தனலாபம், கீர்த்தி, நச்செய்தி அறிதல்

## ஆயிலியம் கேட்டை ரேவதியில் பிறந்தவகளினது பலன்

15 1 ஞா ஆரம்பம்

19 5 வி சுக்கிர

தனலாபம், கீர்த்தி, நற்செய்திஅறிதல்

21 7 ச செவ்

அவமானம், மனக்கிலேசம், அசௌக்கியம்,

23 9 தி சூரியன்

தலையிடிநோய், அக்கினிபயம், காரியக்கேடு

27 13 வெ புதன் கியம்.

பந்துதரிசனம், பகைவரும், உறவு.சௌக்

1 17 செ சந்தி

காரியத்தடை, ரோகம், கிலேசம்.

5 21 ச ராகு வியா தோஷம்

சௌக்கியம், பெரியோர் சன்மானம், சந்

8 24 செ கேது

கவலை, யோசனை, வீண்வாக்குவாதம்.

11 27 வெ சந்

நீரில்அபாயம், தனநஷ்டம், கிலேசம்

15 31 செ சனி

அலைச்சல், காரியக்கேடு. சோம்பல்.